# அத்தியாயம் 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு


கடந்த மூன்றாண்டுகளாகக் காணப்பட்ட சென்மதி நிலுவையின் சாதகமான போக்கு, சவால்மிக்க வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் 2008இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதியிலும் தொடர்ந்து காணப்பட்டதெனினும் அதன் பின்னர், உலகம் முழுவதும் பரந்து காணப்பட்ட நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக கணிசமானளவில் நேர்மாறாகியது. வெளிநாட்டுத்துறை மாறிகள் உட்பட, நாட்டின் பொருளாதார அடிப்படைகள் 2008இன் மூன்றாவது காலாண்டின் இறுதிவரை உறுதியாக முன்னேறியிருந்தன. வெளிநாட்டுத்துறை குறிகாட்டிகளில் பெரும்பாலானவை, அதாவது, ஏற்றுமதிகள், தொழிலாளர் பணவனுப்பல்கள், சென்மதி நிலுவை, குறுங்கால முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் என்பன ஆரம்ப எறிவுகளுக்கும் மேலான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதாரம் மெதுவடைந்தமை, உயர்வடைந்து செல்லும் எண்ணெய் விலைகள், உற்பத்திச் செலவு, ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்ட செலாவணி வீதம், உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை + திட்டம் புதுப்பிக்கப்படுவது தொடர்பான நிச்சயமற்ற நிலைமை போன்ற பல்வேறு சவால்களுக்குமிடையிலும் ஏற்றுமதிகள் 2008 செத்தெம்பர் வரை ஏறத்தாழ 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன. பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த பெற்றோலிய மற்றும் பண்ட விலைகள் காரணமாக இறக்குமதிச் செலவினம் கணிசமாக வளர்ச்சியடைந்ததால், வர்த்தக பற்றாக்குறை 2008 செத்தெம்பர் இறுதியில் 88.1 சதவீதத்தால் விரிவடைந்தது. விரிவடைந்த பற்றாக்குறை முதல் ஒன்பது மாதங்களிலும் ஏறத்தாழ 20 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்த தனியார்துறை பணவனுப்பல்களின் மூலம் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டதன் மூலம் நடைமுறைக்கணக்கின் விரிந்த பற்றாக்குறையின் தாக்கத்தை ஓரளவிற்கு குறைத்தது. அரசு மற்றும் தனியார்துறைக்கான தேறிய குறுங்கால வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள், 2008 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 1,004 மில்லியன் உச்சத்தினையடைந்து, மூலதனம் மற்றும் நிதியியல் கணக்கில் மிகையொன்றினை உருவாக்க உதவியது. இது உயர்ந்த நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையை நிதியிட வேண்டிய அளவிற்கும் கூடுதலாக போதுமானதாக அமைந்து 2008 செத்தெம்பர் இறுதியில் சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 173 மில்லியன் மிகையினைத் தோற்றுவித்தது.







வரைபடம் 5.2 வெளிநாட்டு செலாவணி வருவாய்களின் முக்கிய மூலங்கள்





**ஆண்டு முன்னேறிச் செல்கையில் முழு வெளிநாட்டு நிதியியல் தோற்றப்பாடு மாற்றமடைந்து உலகளாவிய பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை விரைவாக மோசமடையச் செய்ததுடன் நாடு 2008 செத்தெம்பர் இறுதிவரை அடைந்த திருப்பதிகரமான வெளிநாட்டுத்துறை செயலாற்றத்தை பலவீனப்படுத்தியது.** ஐக்கிய அமெரிக்காவின் துணை முதன்மை ஈட்டுக்கடன் வழங்கலிலிருந்து வெளிக் கிளம்பிய நிதியியல் நெருக்கடியானது மற்றைய முக்கிய சந்தைகளுக்கும் பரவி, அதன் மூலம் உலகளாவிய நிதியியல் குழப்ப நிலைமையைத் தோற்றுவித்ததுடன், அது படிப்படியாக கசிந்து உண்மைத்துறைகளுக்கும் வியாபித்தது. குறிப்பாக முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் உலகளாவிய வளர்ச்சியில் தோற்றுவிக்கப்பட்ட மெதுவடைவு வலு மற்றும் ஏனைய பொருட்களுக்கான உலகளாவிய கேள்வியில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட வழிவகுத்ததுடன், இது பெற்றோலியத்தினதும் மற்றைய பண்டங்களினதும் விலைகளின் தலைகீழான வீழ்ச்சிக்கும் இட்டுச் சென்றது. பன்னாட்டுச் சந்தை விலைகளில் ஏற்பட்ட எதிர்பாராத கூடிய ஏற்றவிறக்கங்கள் பாரிய இறக்குமதிச் செலவைக் குறிப்பிடத்தக்க தொகையினால் குறைத்தது மட்டுமன்றி ஏற்றுமதிக்கான கேள்வியையும் பாதித்திருக்கிறது. இவ்வாண்டு ஐ.அ.டொலர் 5,871 மில்லியன் பற்றாக்குறையுடன் முடிவடைந்து 2007இனை விட 60.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. உலகளாவிய நிதியியல் குழப்ப நிலை அதன் விளைவால் ஏற்பட்ட திரவத்தன்மை இறுக்கம், வளர்ந்து வரும் நிச்சயமற்ற தன்மை என்பன உலகளாவிய ரீதியில் வர்த்தகம் மற்றும் மூலதன உட்பாய்ச்சலைக் குறிப்பிடத்தக்களவில் கட்டுப்படுத்தியது. இது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்களிலும் முறிகளிலும் செய்த முதலீடுகளை சடுதியாக மீளப் பெற்றுக் கொள்ளவும் குறுங்கால கொடுகடன் வசதிகளின் மீது அவசரமான கோரல்களை மேற்கொள்ளவும் வர்த்தக நிதியிடலில் கடுமையான வறிதாக்கல் தோன்றவும் ஐ.அ.டொலருக்கெதிராக முக்கியமான பன்னாட்டு நாணயங்கள் கூடியளவிற்கு தேய்வடைந்தமையின் விளைவாக பெருமளவு பெறுமதி இழப்புக்கள் உருவாகவும் வழிவகுத்தது. இதற்கமைய, இறுதிக்காலாண்டில் வெளிநாட்டுத்துறையில் நிலவிய பின்னடைவு நாட்டின் சென்மதி நிலுவையின் மீது அழுத்தத்தைத் தோற்றுவித்தது. 2008 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 515 மில்லியன் கொண்ட உச்சமட்டத்தினை அடைந்த சென்மதி நிலுவையின் மிகையானது 2008 இறுதியில் ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் கொண்ட பற்றாக்குறைக்கு மாற்றமடைந்ததுடன், ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் நீங்கலாக வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் 2008 யூலையில் பதிவு செய்யப்பட்ட பெறுமதியான ஐ.அ.டொலர் 3.56 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1.75 பில்லியனுக்கு ஏறத்தாழ 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**உலகளாவிய நாணயச் சந்தை முன்னெப்பொழுதுமில்லாத அளவிற்கு உயர்ந்தளவு ஏற்ற இறக்கங்களுக்குட்பட்டிருந்ததிற்கு மத்தியிலும் 2008இல் செலாவணி வீதக் கொள்கை உறுதியான தன்மையின் மீது கூடியளவு கவனத்தைச் செலுத்தியதுடன் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினைப் பேணுவதற்காக சில படிப்படியான தேய்வுகள் அனுமதிக்கப்பட்டன.** ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் செலாவணி வீதம் பெறுமதியில் உயர்வடைந்ததுடன் அதன் பின்னர் தேய்வடைந்து, தளம்பல்களுக்குட்பட்டதெனினும் உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டதன் மூலம் தளம்பல் கட்டுப்படுத்தப்பட்டது. 2008 மேயிலிருந்து ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியலின் வெளிநின்ற தொகையின் 10 சதவீதம் வரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டதன் மூலம் மூலதனக் கணக்கின் தாராளமயமாக்கல் மேலும் மேம்படுத்தப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கின் தொடர்ச்சியாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2008இல் நாட்டின் மொத்த வெளிநாட்டுக் கடன்பாடு வீழ்ச்சியடைந்தது.

## 5.2 வெளிநாட்டுத்துறைக் கொள்கைகளும் நிறுவனரீதியான ஆதரவும்

**அரசாங்கத்தின் வெளிநாட்டு வர்த்தக உபாயத்தின் முழுக் கவனமும் ஏற்றுமதி உற்பத்திகளையும் சந்தைகளையும் பன்முகப்படுத்துவதன் மீதே தொடர்ந்து குவிந்திருந்தது.** இது, உயர் பெறுமதி கூட்டப்பட்ட கூறுகளின் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல், உற்பத்தியாக்கத்தினை அதிகரிக்கின்ற நடவடிக்கைகளின் ஈடுபாடுகளை ஊக்குவித்தல், அதிகரித்துச் செல்கின்ற போட்டித்தன்மை மிகுந்த பன்னாட்டுச் செயற்பரப்பில் காத்திரமான சந்தைப்படுத்தல் உபாயங்களைப் பயன்படுத்தல் மற்றும் புதிய சந்தைகளைக் கண்டறிதல் என்பனவற்றின் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயலாற்றத்திற்கு வலுவான பங்களிப்பாளராக வர்த்தகத்தினை மாற்றுவதற்காக கடுமையாக உழைத்தது. எனினும், ஏற்றுமதிப் பரவலாக்கத்திலான மெதுவான முன்னேற்றம் உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, இருபுடை மற்றும் பல்புடைவர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் வர்த்தகம் செய்யும் நாடுகளின்

வரைபடம் 5.1 சென்மதி நிலுவை



எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றமை, பன்னாட்டுத் தரங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளைப் பின்பற்ற வேண்டிய தேவை என்பன இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைக்கு குறிப்பிடத்தக்க சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

உலகச் சந்தையில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட பரந்தளவிலான தளம்பல்கள், உள்நாட்டு விலைகளில் அவற்றின் தாக்கத்தைக் குறைப்பதற்கான தற்காலிக வழிமுறைகளை தேவைப்படுத்தியது. இவை, ஆண்டின் முதலரைப் பகுதி முழுவதும் இடைவிடாது காணப்பட்ட பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்காக ஒரு சில அத்தியாவசியப் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்களை உள்ளடக்குகின்றன. இதேவேளை, வர்த்தகப்பற்றாக்குறை மேலும் விரிவடைவதன் மீதான அழுத்தத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தீர்வைகளைச் சீராக்குவதற்கும் அத்தியாவசியமற்ற குறிப்பிட்ட இறக்குமதிகள் மீதான அளவு வைப்புத் தேவைப்பாட்டை விதிபதற்குமான

**அட்டவணை 5.1**

**சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (அ)**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(ஆ) | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(ஆ) |
| **வர்த்தக நிலுவை** | **-2,243** | **-2,516** | **-3,370** | **-3,656** | **-5,871** | **-227,171** | **-253,082** | **-350,037** | **-404,703** | **-635,359** |
| ஏற்றுமதி | 5,757 | 6,347 | 6,883 | 7,640 | 8,137 | 583,967 | 638,276 | 716,579 | 845,683 | 881,321 |
| இறக்குமதி | 8,000 | 8,863 | 10,253 | 11,296 | 14,008 | 811,138 | 891,359 | 1,066,615 | 1,250,386 | 1,516,681 |
| பணிகள், தேறிய | 419 | 338 | 257 | 302 | 402 | 42,735 | 34,043 | 26,660 | 33,357 | 43,680 |
| பெறுகைகள் | 1,527 | 1,540 | 1,625 | 1,775 | 2,003 | 154,746 | 154,877 | 168,802 | 196,249 | 217,055 |
| கொடுப்பனவுகள் | 1,108 | 1,202 | 1,368 | 1,472 | 1,601 | 112,011 | 120,833 | 142,142 | 162,892 | 173,375 |
| வருமானம், தேறிய | -204 | -299 | -389 | -358 | -972 | -20,688 | -30,049 | -40,424 | -39,054 | -105,032 |
| பெறுகைகள் | 157 | 35 | 311 | 449 | -32 | 15,813 | 3,629 | 32,457 | 50,213 | -3,133 |
| கொடுப்பனவுகள் | 360 | 335 | 700 | 807 | 940 | 36,501 | 33,678 | 72,881 | 89,267 | 101,899 |
| **பொருட்கள், பணிகள் மற்றும் வருமானம் (தேறிய)** | **-2,028** | **-2,478** | **-3,503** | **-3,712** | **-6,441** | **-205,124** | **-249,088** | **-363,801** | **-410,401** | **-696,712** |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 1,350 | 1,736 | 1,904 | 2,214 | 2,565 | 136,672 | 174,542 | 197,861 | 245,006 | 277,711 |
| பெறுகைகள் | 1,564 | 1,968 | 2,161 | 2,502 | 2,918 | 158,291 | 197,968 | 224,678 | 276,814 | 316,091 |
| கொடுப்பனவுகள் | 214 | 233 | 257 | 288 | 353 | 21,619 | 23,426 | 26,817 | 31,808 | 38,380 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 30 | 93 | 101 | 97 | 101 | 3,038 | 9,300 | 10,524 | 10,677 | 10,928 |
| **நடைமுறை கணக்கு** | **-648** | **-650** | **-1,499** | **-1,401** | **-3,775** | **-65,414** | **-65,246** | **-155,416** | **-154,717** | **-408,073** |
| **மூலதன, நிதியியல் கணக்குகள்** | **631** | **1,224** | **1,808** | **2,097** | **1,773** | **60,539** | **123,866** | **190,768** | **230,978** | **193,713** |
| **மூலதனக்கணக்கு** | **64** | **250** | **291** | **269** | **291** | **4,974** | **25,108** | **30,292** | **29,669** | **31,456** |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 64 | 250 | 291 | 269 | 291 | 4,974 | 25,108 | 30,292 | 29,669 | 31,456 |
| பெறுகைகள் | 71 | 257 | 299 | 278 | 303 | 5,643 | 25,863 | 31,171 | 30,735 | 32,774 |
| கொடுப்பனவுகள் | 7 | 7 | 8 | 10 | 12 | 669 | 755 | 879 | 1,066 | 1,319 |
| **நிதியியல் கணக்கு** | **567** | **974** | **1,517** | **1,828** | **1,483** | **55,565** | **98,757** | **160,477** | **201,309** | **162,258** |
| நீண்டகாலம் : | 680 | 798 | 907 | 1,251 | 1,099 | 69,805 | 80,391 | 95,089 | 140,054 | 109,174 |
| நேரடி முதலீடு | 227 | 234 | 451 | 548 | 691 | 22,826 | 23,505 | 46,985 | 60,768 | 74,837 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு | 217 | 234 | 451 | 548 | 691 | 21,948 | 23,505 | 46,985 | 60,768 | 74,837 |
| தனியார்மயமாக்கல் பெறுகைகள் | 10 | - | - | - | - | 878 | - | - | - | - |
| தனியார் நீண்டகாலம் (தேறிய) | 14 | 10 | -35 | 31 | 74 | 2,270 | 1,054 | -3,590 | 3,314 | 7,768 |
| உட்பாய்ச்சல்கள் | 169 | 197 | 139 | 199 | 265 | 17,503 | 19,739 | 14,469 | 22,033 | 28,693 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 155 | 186 | 174 | 168 | 191 | 15,233 | 18,685 | 18,058 | 18,719 | 20,925 |
| அரச நீண்ட காலம் (தேறிய) | 439 | 553 | 491 | 672 | 252 | 44,709 | 55,832 | 51,694 | 75,971 | 26,568 |
| உட்பாய்ச்சல்கள் | 771 | 747 | 932 | 1,290 | 1,059 | 78,299 | 75,309 | 97,690 | 144,146 | 114,658 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 331 | 194 | 441 | 618 | 807 | 33,590 | 19,477 | 45,996 | 68,175 | 88,090 |
| குறுங்காலம் : | -112 | 176 | 610 | 577 | 466 | -14,240 | 18,366 | 65,387 | 61,256 | 53,084 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் | 11 | 60 | 51 | 101 | 60 | 1,109 | 6,103 | 5,377 | 11,249 | 6,460 |
| தனியார் குறுங்காலம் (தேறிய) | 28 | 16 | -30 | 20 | 594 | 2,514 | 1,640 | -3,066 | 1,868 | 63,987 |
| வர்த்தக வங்கி சொத்துக்கள் (தேறிய) | -354 | -223 | 297 | -281 | 210 | -45,367 | -19,669 | 23,789 | -31,352 | 17,889 |
| வர்த்தக வங்கி பொறுப்புக்கள் (தேறிய) | 202 | 323 | 293 | 364 | -185 | 27,504 | 30,292 | 39,287 | 38,746 | -11,858 |
| அரச குறுங்காலம் (தேறிய) | - | - | - | 372 | -213 | - | - | - | 40,744 | -23,395 |
| பெறுமதி சீராக்கங்கள் | -189 | -72 | -105 | -165 | 777 | -2,599 | -10,494 | -1,830 | -16,259 | 88,137 |
| **திரண்ட நிலுவை (இ)** | **-205** | **501** | **204** | **531** | **-1,225** | **-7,474** | **48,125** | **33,523** | **60,002** | **-126,223** |
| நாணய அசைவுகள் **(இ)** | 205 | -501 | -204 | -531 | 1,225 | 7,474 | -48,125 | -33,523 | -60,002 | 126,223 |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் ரூ/ஐ.அ.டொ** | | | | | | **101.19** | **100.50** | **103.96** | **110.62** | **108.33** |
| **மொ.உ.உ.இற்கான விகிதம் சதவீதங்களில் (ஈ)** | | | | | | | | | | |
| வர்த்தக கணக்கு | -10.9 | -10.3 | -11.9 | -11.3 | -14.4 | -10.9 | -10.3 | -11.9 | -11.3 | -14.4 |
| நடைமுறை கணக்கு | -3.1 | -2.7 | -5.3 | -4.3 | -9.3 | -3.1 | -2.7 | -5.3 | -4.3 | -9.3 |
| கொடைகளற்ற நடைமுறை கணக்கு | -3.3 | -3.0 | -5.7 | -4.6 | -9.5 | -3.3 | -3.0 | -5.6 | -4.6 | -9.5 |

(அ) இந்த வெளிப்படுத்துகை பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994 இலிருந்து கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானவை

(இ) ஐ.அ.டொலர் பெறுமதிகள் ஆண்டின் இறுதி செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி ரூபாய் பெறுமதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஈ) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளினாலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2008இன் இறுதிப்பகுதியில் உலகளாவிய சந்தைகளில் பண்ட விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் காரணமாக அரசாங்கத்தின் வரி அரசிறை சேகரிப்பினை மீளவும் அதிகரிக்கும் பொருட்டு பெரும்பாலான தீர்வை வழிமுறைகள் அகற்றப்பட்டன அல்லது மாற்றப்பட்டன.

**2004இல் அறிமுகப்படுத்தப்பட்ட 0, 2.5, 6, 15 மற்றும் 28 சதவீதங்களைக் கொண்ட பிரிவு தீர்வையமைப்பு முக்கியமான வர்த்தகக் கொள்கைக் கருவியாக தொடர்ந்தும் காணப்பட்டது.** சுங்கத் தீர்வை மீதான மேலதிக கட்டணம் 2008இல் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. அதேவேளை, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் உயர்வினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட பதினொரு அத்தியாவசிய உணவு பொருட்களின் இறக்குமதிக்கு பிரயோகிக்கத்தக்க சுங்கத் தீர்வை, பெறுமதிசேர் வரி, துறைமுகங்கள் வானூர்தி நிலைய அபிவிருத்தி தீர்வை, சமூக பொறுப்பாண்மை தீர்வை சுங்க மையத்தில் பிரயோகிக்கத்தக்க மற்றும் ஏனைய விதிப்புக்கள் என்பன ஒரே ஒரு சிறப்புப் பண்டத் தீர்வையின் மூலம் பிரதியீடு செய்யப்பட்டன. மொத்த இறக்குமதிகள் மற்றும் சுங்கத் தீர்வைகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட சராசரி தீர்வை வீதம், முக்கியமாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது வழங்கப்பட்ட தீர்வைக் குறைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்கள் காரணமாக 2007இன் 4.1 சதவீதத்திலிருந்து 2008இல் 3.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், இறக்குமதிக்குப் பிரயோகிக்கத்தக்க மற்றைய விதிப்புக்களாக; சுங்கத்தீர்வை மீதான மேலதிகக் கட்டணம், பெறுமதிசேர் வரி, கலால் தீர்வை (மது வகை, புகையிலை மற்றும் ஊர்திகள் மீதானவை) மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் மீதான செஸ்வரி என்பன காணப்பட்டன. இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான இறக்குமதிகள் மீது வழங்கப்பட்ட முன்னுரிமைத் தீர்வைகள், வெளிநாட்டு வர்த்தகச் சூழலில் வெளிப்படையான தன்மையினையும் ஊகிக்கப்படக்கூடிய தன்மைகளையும் மேம்படுத்துவதற்காக தொடர்ந்தும் பின்பற்றப்பட்டது.

**இலங்கை இருபுடை, பிராந்திய மற்றும் பல்புடை மட்டங்களில் சந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை அதிகரிக்க தொடர்ந்தும் கடுமையாக உழைத்தது.** பல்புடைப் பக்கத்தில், 2001இலிருந்து உலக வர்த்தக அமைப்பு பேச்சுவார்த்தைகளின் அதிகார நிலையமாக விளங்கும் டோகா சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அதன் எட்டாவது ஆண்டை பூர்த்தி செய்தபோதும் வெற்றிபெறாமலே முடிவடைந்திருக்கிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மையல்லாதவற்றின் கீழ் சந்தையை அடைவதற்கான பேச்சுவார்த்தைகள் பெருமளவு தீர்வைக் குறைப்பு பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தின. வேளாண்மையைப் பொறுத்தவரை இலங்கை நிகர உணவு இறக்குமதி செய்கின்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடாகவும் சமநிலையைப் பேண வேண்டிய நாடாகவும் அதேபோன்று பாதிக்கப்படக்கூடிய உள்நாட்டு வேளாண்மைத்துறைக்கு ஆதரவளிக்க வேண்டிய நாடாகவும் விளங்க வேண்டியிருக்கிறது. வேளாண்மையல்லா சந்தையை அணுகும் முறையின் கீழ் இலங்கை அதன் சொந்த

**அட்டவணை 5.2 சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)**

| விடயம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(ஆ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **10.4** | **10.4** | **11.2** | **12.4** | **6.7** |
| உணவும் குடிபானங்களும் | 8.5 | 9.6 | 10.7 | 13.5 | 6.8 |
| அரிசி | 4.9 | 10.6 | 23.4 | 3.1 | 4.2 |
| மா | 7.2 | 3.8 | 33.7 | 31.9 | 24.3 |
| சீனி | 4.6 | 1.5 | 1.9 | 23.9 | 2.5 |
| கோதுமையும் மெசுலினும் | 0.1 | 1.1 | 5.6 | 6.3 | 6.3 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 7.9 | 10.2 | 9.6 | 7.7 | 1.4 |
| கருவாடு | 5.9 | 5.9 | 5.0 | 2.9 | 2.9 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 10.0 | 9.8 | 7.8 | 4.9 | 1.4 |
| ஏனையவை | 17.4 | 22.0 | 24.2 | 20.8 | 14.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 12.2 | 11.1 | 11.7 | 11.2 | 6.5 |
| உந்து ஊர்திகளும் துவிச்சக்கர வண்டிகளும் | 21.1 | 18.9 | 18.3 | 16.3 | 4.6 |
| வானொலிப் பெட்டிகளும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் | 9.4 | 13.6 | 7.1 | 7.7 | 6.0 |
| இறப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் | 25.8 | 26.2 | 19.2 | 22.4 | 21.5 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.6 | 0.5 | 0.3 | 0.4 | 0.4 |
| ஏனையவை | 8.9 | 8.7 | 10.3 | 10.6 | 10.5 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **1.9** | **2.1** | **1.5** | **1.5** | **2.1** |
| வளமாக்கி | 3.1 | 2.7 | 2.5 | 2.7 | 2.7 |
| மசகெண்ணெய் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலியப் பொருட்கள் | 0.9 | 1.9 | 2.3 | 1.6 | 4.4 |
| இரசாயன கூறுகளும் கலவைகளும் | 2.6 | 2.0 | 1.8 | 1.9 | 1.8 |
| நிறமூட்டல், தோல் பதனிடல், வர்ணமிடல் | 4.5 | 4.4 | 2.6 | 2.5 | 2.4 |
| தாளும் தாள் மட்டையும் | 6.0 | 6.0 | 2.4 | 2.2 | 1.7 |
| புடவைகள் | 0.0 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 4.3 | 4.5 | 3.3 | 3.3 | 3.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **6.1** | **5.8** | **5.2** | **4.8** | **5.2** |
| கட்டடப்பொருட்கள் | 9.0 | 7.8 | 9.2 | 7.2 | 6.6 |
| போக்குவரத்து கருவிகள் | 11.9 | 9.7 | 7.0 | 7.1 | 12.0 |
| பொறிகளும் கருவிகளும் | 3.2 | 3.3 | 3.2 | 2.7 | 2.4 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 5.0 | 5.3 | 3.4 | 4.2 | 4.3 |
| **சராசரி தீர்வை** | **4.5** | **4.6** | **4.3** | **4.1** | **3.8** |

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு (பொ.கா.பெ)
(ஆ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கைச் சுங்கம்

தீர்வைக் குறைப்புக்கள் பற்றியும் அதேபோன்று முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளின் அர்த்தமுள்ள தீர்வைக் குறைப்புக்கள் பற்றியும் இலங்கை கரிசனை கொண்டதாகக் காணப்படுகின்றது. சொந்த தீர்வைக் குறைப்புக்களின் கீழான பேச்சுவார்த்தைகள், 30 சதவீதம் கொண்ட சராசரியொன்றிற்கு அதன் தீர்வை இணைப்புக்களில் 80 சதவீதத்தினைக் கட்டுப்படுத்தும் இலங்கையின் கடப்பாடுகளுடன் முடிவடைந்தன. இதற்கமைய இலங்கை தீர்வைக் குறைப்புக்களிலிருந்து அதன் தீர்வை அளவில் 20 சதவீதத்தினை நீக்கியதன் மூலம் இலங்கை போதுமானளவு கொள்கை இடைவெளியினைக் கொண்டிருந்தது. 2008இல் வர்த்தக விதிகள், பணிகள், வர்த்தகத்துடன் தொடர்பான புலமைச் சொத்து உரிமைகள், வர்த்தக வசதிப்படுத்தல், புவியியல்சார் அடையாளங்கள் போன்றன மீதான பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்தும் இடம் பெற்றன. உலகளாவிய பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் பாதுகாப்பு தொடர்பாக வளர்ந்து வரும் அச்சமூட்டல்கள், உலக வர்த்தக அமைப்பின் பேச்சுவார்த்தை தொடர்பாக நேரகாலத்துடன் வெற்றிகரமான முடிவொன்றினைக் காணவேண்டிய அதிகரித்த கடப்பாட்டினை உறுப்பு நாடுகளுக்கு ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் அண்மையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு, இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு தீர்வையற்ற சந்தை நுழைவு வசதியினை வழங்குகின்ற முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட + முறை திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளின் பயன்பாடு உதவுவதாக இருந்தது.** இத்திட்டத்தின் தாக்கம் நாட்டின் சந்தைப் பங்குகளின் விரிவாக்கத்தில், குறிப்பாக ஐக்கிய இராச்சியம், இத்தாலி, சேர்மனி, பிரான்சு மற்றும் நெதர்லாந்து என்பனவற்றின் சந்தைப்பங்குகளின் விரிவாக்கத்திலும் அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உற்பத்திகளின் பன்முகப்படுத்தலிலும் பிரதிபலிக்கப்படுகிறது. தற்போதைய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் 2008 இறுதியில் காலாவதியானதுடன் இது சில மாற்றங்களுடன் 2009 இலிருந்து மூன்றாண்டுகளுக்கு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அதன் ஏற்றுமதிகளுக்காக முன்னுரிமை நுழைவு வசதியைப் பெறுவதற்கு புதுப்பிக்கப்பட்ட திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதும், குறிப்பிட்ட பன்னாட்டு மாநாடுகளின் சில ஒழுங்கு முறைகளை காத்திரமான முறையில் நடைமுறைக்கிடும் அளவினை மதிப்பிடுவதற்காக அதன் தகைமை தற்பொழுது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

**இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், இலங்கையின் இறுதி தீர்வை தாராளமயமாக்கல் கடப்பாடு, 2,700 உற்பத்திகளுக்கான தீர்வை முன்னுரிமைகளை 70 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கு அதிகரித்ததன் மூலம் 2008 நவெம்பரிலிருந்து நடைமுறைக்கு வந்தது.** இக்கடப்பாடு பூரணமாக்கப்பட்டதன் காரணமாக 2000 மாச்சு தொடக்கம் நடைமுறைக்கு வந்த இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தற்போது முழுமையாக நடைமுறைக்கிடப்பட்டுள்ளது. 2008இல் இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தமைக்கு செப்பு, அலுமினியம் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகளினது ஏற்றுமதிகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், இது, மற்றைய முக்கிய சந்தைகள் இந்நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டுள்ள இந்நேரத்தில் இரு நாடுகளுக்கிடையிலான பாரிய உள்ளார்ந்த வர்த்தகத்தினை குறைத்து மதிப்பிடுவதாக இருக்காது.

**அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்கேற்பு உடன்படிக்கையின் கீழ், மேலும் தாராளமயப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் இரு நாடுகளும் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றன.** அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார பங்கேற்பு உடன்படிக்கையானது இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை, குறிப்பிட்ட எதிர்க்கணிய பட்டியல்களை மேலும் குறைப்பதன் மூலமும் பணிகளிலுள்ள வர்த்தகத்தினை கூட்டிணைப்பதன் மூலமும் இரு நாடுகளுக்குமிடையிலான பாரிய பொருளாதார ஒருங்கிணைப்பினை நோக்கி மேலுமொருபடி முன்னேறச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்கேற்பு உடன்படிக்கையின் கட்டமைப்பு உடன்படிக்கை மீதான கலந்துரையாடல்களை இரு நாடுகளும் நிறைவு செய்துள்ள போதும் அனைத்து ஆர்வலர்களதும் கருத்துக்களை உள்ளடக்குவதற்காக அவர்களுடன் மேலும் ஆலோசனை நடத்த வேண்டியதன் தேவையினைக் கருத்திற் கொண்டு இறுதிப்படுத்தும் செய்முறைகளுக்கு இன்னும் சில காலம் பிடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**2005 யூனில் நடைமுறைக்கிடப்பட்ட பாக்கித்தான் இலங்கை சுதந்திர உடன்படிக்கையின் கீழ், பொருட்கள் மற்றும் பணிகள் இரண்டிற்குமான தற்போதைய வர்த்தக வாய்ப்புக்களை மேலும் விரிவாக்கும் நோக்குடன் இதையொத்த அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கையொன்றுக்காக பாக்கித்தானுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.** அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை தொடர்பாக பாக்கித்தானுடன் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளன. ஊர்தி தொடர்பான உற்பத்திகள், மசகுத் தேங்காய் எண்ணெய் மற்றும் போத்தல்களை குளிரூட்டும் பொறிகள் என்பன மீதான தீர்வைச் சலுகைகளுடன் தொடர்பான சில பிரச்சனைகளுக்கு 2008 யூனில் தீர்வு காணப்பட்டன. பாக்கித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலின் பின்னர், இருபுடை வர்த்தகத்தில் கணிசமான முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஒப்பந்தத்திற்கு முன்னான பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2008இல் இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளின் பெறுமதி 81 சதவீதத்தில் வளர்ச்சியடைந்த வேளையில் பாக்கித்தானிலிருந்தான இறக்குமதிகள் 78 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இலங்கை அதன் முன்னுரிமை அளவினை 40 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்கு அதிகரிக்கின்ற அதன் நான்காவது தீர்வைக் குறைப்புக் கடப்பாடு 2008 நவெம்பரில் நடைமுறைக்கிடப்பட்டது. பாக்கித்தான் அதன் இறுதி தீர்வைக் குறைப்பு கடப்பாட்டினை நடைமுறைக்கிடுகையில் 4,500 இலங்கை உற்பத்திகள் பாக்கித்தானுக்கான தீர்வையற்ற நுழைவினை அனுபவிக்கும்.

**ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தக முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கை, இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய ஒத்துழைப்பு மேம்படுவதற்கான பயன்மிக்க நிறுவன ரீதியான ஒழுங்குகளை வழங்கும்.** இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்திற்கு தடையாக இருக்கும் எந்தவொரு விடயத்தையும் அடையாளம் கண்டு கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்குமிடத்து, வர்த்தக அலுவலர்களிடையே கிரமமான உயர்மட்ட தொடர்புகளை இது வழங்கும். 2008 மேயில் அமைச்சரவை மட்டத்திலான ஆண்டு ஆலோசனைக் கூட்டம் வாசிங்டனில் நடைபெற்றதுடன் இலங்கை ஐக்கிய அமெரிக்காவிற்கான அதன் ஏற்றுமதிகளுக்கு குறிப்பாக ஆடைகளுக்கான அதிகரித்த சந்தை வாய்ப்புக்களை அடைந்து கொள்வதனையும் புலமைச் சொத்துரிமை போன்ற துறைகளில் ஐக்கிய அமெரிக்காவின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதனையும் அதன் பிரதான இலக்காகக் கொண்டிருந்தது.

**இலங்கை அதன் அயலவர்களுடன் மரபுவழி வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்குடன் செயற்றிறனான உறுப்பினர் என்ற ரீதியில் பிராந்திய வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்தது.** இது தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை, 'பிம்ஸ்டெக்' என அழைக்கப்படும் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முனைவுகள் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலய அமைப்பு என்பனவற்றின் கீழ் தொடர்ச்சியாக பிராந்திய வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளித்து வருகின்றது. இலங்கை

ஈரான் மற்றும் சீனாவுடன் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்கான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

**அரசாங்கத்தின் பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பில் தெளிவுபடுத்தப்பட்டவாறு, அரசினதும் ஏனைய நிறுவனங்களினதும் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் நாட்டின் வர்த்தக மாதிரிகளின் ஒரு தாக்கத்ததைக் கொண்டிருந்தன.** துறைமுக அபிவிருத்திகள் மீதான பாரியளவு செயற்றிட்டங்கள், வலுப்பொறிகள், நீர்ப்பாசன செயற்றிட்டங்கள் மற்றும் நீர் மூலவளத் திட்டங்கள், கிராமிய மின்னூட்டல் திட்டங்கள் மற்றும் வளமாக்கி உதவுதொகைத் திட்டங்கள் என்பனவற்றின் நடைமுறைப்படுத்தல்கள், முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளின் அளவினை உயர்த்திய வேளையில், அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளில் பரந்தளவு தளம்பல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான ஏனைய சில முன்மொழிவுகள் நுகர்வு இறக்குமதிகளின் அளவினை குறிப்பிட்டளவிற்கு மட்டுப்படுத்தின. 2008இல் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பரந்தளவிலான ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதிச் சந்தைகளுக்கு உயர்தரம் கொண்ட பெறுமதி கூட்டப்பட்ட வேளாண்மை உற்பத்திகளை வழங்குதல் மற்றும் கிராமப்புறங்களிலுள்ள வேளாண்மையாளர்களின் பங்களிப்புடன் ஏற்றுமதி வலயங்களை நிறுவுதல் என்பனவற்றின் மூலம் ஏற்றுமதிகளிலிருந்து உருவாக்கப்படும் பங்கிலாபங்களை மக்களின் பெரும் பங்கினரிடையே பங்கீடு செய்வது ஏற்றுமதி அபிவிருத்தி சபையினரால் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளில் தலையானதாகும். இலங்கை கட்டளைகள் பணியகத்தின் பங்கேற்புடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பன்னாட்டு தரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வேளாண்மை உற்பத்தியின் ஏற்றுமதியாளர்களுக்கு உதவியளிக்கும் குறிக்கோளுடன் சேதன

## அட்டவணை 5.3 வர்த்தகச் சுட்டெண்கள் (அ)

1997=100

| வகை | 2007 (ஆ) | | | 2008(இ) | | | வளர்ச்சி வீதம் (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகிற்கான விலைச் சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகிற்கான விலைச் சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகிற்கான விலைச் சுட்டெண் |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **141.9** | **125.9** | **112.7** | **174.6** | **130.3** | **134.0** | **23.1** | **3.5** | **18.9** |
| தேயிலை | 142.2 | 122.1 | 116.5 | 176.4 | 125.4 | 140.7 | 24.0 | 2.7 | 20.8 |
| இறப்பர் | 139.0 | 85.8 | 162.1 | 159.0 | 80.7 | 196.9 | 14.4 | -5.9 | 21.5 |
| தெங்கு | 120.0 | 124.1 | 96.7 | 145.4 | 123.0 | 118.2 | 21.1 | -0.9 | 22.2 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 159.7 | 167.9 | 95.1 | 198.1 | 187.8 | 105.5 | 24.1 | 11.9 | 10.9 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **173.3** | **163.0** | **106.4** | **178.9** | **162.3** | **110.2** | **3.2** | **-0.4** | **3.6** |
| புடவைகளும் ஆடைகளும் | 146.5 | 150.8 | 97.2 | 152.2 | 154.6 | 98.4 | 3.9 | 2.5 | 1.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 173.5 | 57.5 | 301.7 | 261.7 | 62.9 | 416.1 | 50.9 | 9.4 | 37.9 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 230.6 | 198.6 | 116.1 | 228.4 | 187.9 | 121.6 | -0.9 | -5.4 | 4.7 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **143.1** | **135.0** | **106.0** | **137.0** | **134.2** | **102.1** | **-4.2** | **-0.6** | **-3.7** |
| இரத்தினக்கற்கள் | 127.0 | 126.3 | 100.6 | 121.7 | 124.3 | 97.9 | -4.2 | -1.6 | -2.7 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 354.3 | 249.5 | 142.0 | 338.6 | 264.3 | 128.1 | -4.4 | 5.9 | -9.8 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **164.4** | **153.8** | **106.8** | **175.1** | **154.4** | **113.4** | **6.5** | **0.3** | **6.1** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **163.1** | **167.2** | **97.6** | **200.6** | **195.3** | **102.7** | **23.0** | **16.8** | **5.3** |
| உணவும் குடிபானங்களும் | 129.4 | 116.8 | 110.8 | 176.0 | 157.2 | 111.9 | 36.0 | 34.6 | 1.0 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 212.1 | 240.4 | 88.2 | 236.3 | 250.6 | 94.3 | 11.4 | 4.2 | 6.9 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **208.7** | **147.5** | **141.5** | **269.4** | **154.2** | **174.7** | **29.1** | **4.6** | **23.4** |
| வளமாக்கி | 290.0 | 145.8 | 199.0 | 868.6 | 197.8 | 439.2 | 199.5 | 35.7 | 120.8 |
| மசகெண்ணைய் | 388.1 | 106.8 | 363.5 | 500.9 | 102.3 | 489.7 | 29.1 | -4.2 | 34.7 |
| ஏனைய பெற்றோலியம் | 535.9 | 187.4 | 286.0 | 742.7 | 202.3 | 367.2 | 38.6 | 7.9 | 28.4 |
| இரசாயனக்கூறுகளும் கலவைகளும் | 206.9 | 154.4 | 134.0 | 265.5 | 181.3 | 146.5 | 28.3 | 17.4 | 9.3 |
| கோதுமையும் மெசுலீனும் | 169.8 | 120.6 | 140.7 | 272.5 | 116.4 | 234.0 | 60.5 | -3.5 | 66.3 |
| புடவைகள் (ஆடைகள் உட்பட) | 117.7 | 138.7 | 84.8 | 122.7 | 143.6 | 85.4 | 4.3 | 3.5 | 0.7 |
| பிளாத்திக்குகள் | 249.9 | 184.5 | 135.4 | 257.0 | 180.3 | 142.5 | 2.8 | -2.3 | 5.2 |
| வைரங்கள் | 172.6 | 103.4 | 167.0 | 287.4 | 128.2 | 224.2 | 66.5 | 24.0 | 34.3 |
| ஏனையவை | 197.4 | 195.9 | 100.8 | 216.5 | 196.3 | 110.3 | 9.6 | 0.2 | 9.4 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **202.5** | **225.3** | **89.9** | **224.6** | **217.9** | **103.1** | **10.9** | **-3.3** | **14.7** |
| கட்டடப் பொருட்கள் | 287.2 | 259.9 | 110.5 | 342.8 | 260.1 | 131.8 | 19.4 | 0.1 | 19.3 |
| போக்குவரத்துக் கருவிகள் | 175.2 | 99.5 | 176.0 | 195.5 | 99.2 | 197.0 | 11.6 | -0.3 | 12.0 |
| பொறியும் கருவியும் | 167.7 | 257.3 | 65.2 | 175.9 | 244.6 | 71.9 | 4.9 | -4.9 | 10.3 |
| ஏனைய முதலீட்டு பொருட்கள் | 285.2 | 157.4 | 181.2 | 323.4 | 154.3 | 209.6 | 13.4 | -1.9 | 15.6 |
| **மொத்த இறக்குமதிகள்** | **192.6** | **169.5** | **113.6** | **238.8** | **177.1** | **134.9** | **24.0** | **4.4** | **18.7** |
| வர்த்தக மாற்று விகிதம் | | | 94.0 | | | 84.1 | | | -10.6 |

(அ) ஐ.அ.டொலரில்
(ஆ) திருத்தப்பட்டது.
(இ) தற்காலிகமானவை

மூலங்கள் :இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வேளாண்மை உற்பத்தி மற்றும் பதனிடலுக்கான இலங்கைத் தர நிர்ணயமொன்றினை வடிவமைப்பதற்கான வழிமுறைகளைத் தொடங்கியிருக்கிறது. இப்பிராந்தியத்தில் வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகளை அகற்றுதல், பொருட்கள் மற்றும் பணிகளின் உட்பாய்ச்சலுக்கு வசதியளித்தல் ஆகிய நோக்கங்களுடன் சார்க் நாடுகளின் தேசிய தர நிர்ணயங்களின் இணங்குவிப்பினை மேம்படுத்தி பொறுப்பேற்றுக் கொள்வதற்காக தென்னாசிய பிராந்திய தர நிர்ணய அமைப்பினை நிறுவுவதுடன் தொடர்பான வேலைகளில் இலங்கைக் கட்டளைகள் பணியகம் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

## 5.3 பொருட்களின் வர்த்தகம், வர்த்தக நிலுவை மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

### ஏற்றுமதிச் செயலாற்றம்


**ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2007இன் ஐ.அ.டொலர் 7,640 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 8,137 மில்லியனிற்கு 6.5 சதவீதத்தினால் அதிகரித்தன.** ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 12.7 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்த ஏற்றுமதிகள் ஆண்டின் இறுதியில் உலகளாவிய கேள்வி சுருக்கமடைந்ததன் விளைவால் பாதிக்கப்பட்டு வளர்ச்சியில் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்று ஆண்டின் இறுதியில் 6.5 சதவீதத்தை அடைந்தது. 2008இல் ஐ.அ.டொலர் 1,855 மில்லியனிற்கு 23.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளாண்மை ஏற்றுமதிகள் இவ்வாண்டின் வளர்ச்சிக்கு முக்கிய தூண்டுதலை வழங்கியது. வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 2008இன் ஏற்றுமதிகளில் ஆண்டிற்காண்டு அதிகரிப்பில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்குப் பங்களித்தது. இதற்கு பன்னாட்டுச் சந்தையில் கிடைத்த கவர்ச்சிகரமான விலைகளே பெருமளவிற்குக் காரணமாகும்.

**வேளாண்மை ஏற்றுமதிகளின் வளர்ச்சி 2008இல் ஐ.அ.டொலர் 1,271 மில்லியன் வருவாய்களைப் பதிவு செய்த தேயிலைத் துறையினால் வழிநடத்தப்பட்டதுடன் இதற்கு உயர்ந்த தேயிலை விலையே முக்கிய காரணமாக அமைந்தது.** கென்யாவின் உற்பத்தியில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட போதும் ருஷ்யா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான உயர்வடைந்த கேள்வியின் பின்னணியில், 2008இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கையின் தேயிலை விலைகள் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டத்தினை அடைந்தன. இலங்கை தேயிலை ஏற்றுமதிக்கான பாரிய சந்தையினை உள்ளடக்கியுள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் முறையே 2008இல் மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 46 சதவீதம், 23 சதவீதத்திற்கு வகை கூறின.

**உலகளாவிய நிதியியல் குழப்ப நிலைமை தீவிரமடைந்ததனைத் தொடர்ந்து செத்தெம்பர் மூன்றாவது கிழமையிலிருந்து தேயிலை விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின.** மேலும் விலைக் குறைப்புக்களை எதிர்பார்த்து வாங்குனர்கள் மேற்கொண்ட "பொறுத்திருந்து பார்க்கும்" மனோபாவத்தினால் நிலைமை மேலும் மோசமடைந்தது. உயர்ந்த விலைகள் விரைவான இலாபத்தினை அடையும் மனோபாவத்தினை உற்பத்தியாளர்களுக்கு தோற்றுவித்து தரம் குறைந்த தேயிலையை ஏலங்களுக்குவிட அவர்களை நிர்ப்பந்தித்தமையானது ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் தரம் மோசமடையக் காரணமாயிற்று. தேயிலை விலைகள் தொடர்ந்து மேலும் மோசமாக வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக சில இருப்புக்கள் ஏலங்களில் விற்கப்படாமல் தேங்கியமையினால், தேயிலை சமநிலைப்படுத்தும் நிதியமூடாக விற்பனை செய்யப்படாதிருந்த தேயிலைக் கொள்வனவு செய்தமையின் மூலம் விலைகளைப் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக தேயிலைச் சந்தையில் அரசாங்கம் தலையிட்டது. இவை 2009 சனவரியில் தொடர்ந்து வந்த ஏலங்களில் மீள விற்பனை செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியில் கொழும்பு தேயிலை ஏலங்களில் விலைகள் மோசமடைந்த போதும் உலகம் முழுவதிலுமுள்ள ஏனைய முக்கிய ஏல நிலையங்களிலுள்ள விலைகளுக்கும் மேலானதாகக் காணப்பட்டது. இலங்கைத் தேயிலையுடன் இணைந்திருந்த உயர்தரம் பேணப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கை தேயிலைச் சபையால் நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேயிலைச் சபை எடுத்த வழிமுறைகள் கொழுந்துத் தேயிலை வழங்குனர்களினாலும் அதேபோன்று தேயிலைத் தயாரிப்பாளர்களினாலும் பின்பற்றப்பட்டன.

**வேளாண்மை ஏற்றுமதிகள், நாட்டின் ஏற்றுமதி வருவாய்களின் முக்கியமானதொரு மூலமாக விரைந்து மாற்றமடைந்து 2008இல் ஐ.அ.டொலர் 287 மில்லியன்களை உருவாக்கியது.** சிறு வேளாண்மை உற்பத்திகளிடையே பழவர்க்கங்கள், காய்கறிகள் மற்றும் கராம்பு போன்ற குறிப்பிட்ட வாசனைத் திரவியங்கள் என்பன 2008இன் முதலரைப்பகுதியில் வரவேற்கத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்து விலைகள்,

**வரைபடம் 5.3 பண்டங்களின்படி ஏற்றுமதிகள்**



அளவு ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன. மறுபுறத்தில் கறுவா மற்றும் வெற்றிலை என்பன பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய உயர்ந்த விலைகளின் முக்கிய காரணமாக அதிகரித்தன.

**2008இல் கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 6,159 மில்லியன்களாக விளங்கி 3.2 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவில் ஆடைகளுக்கு காணப்பட்ட மந்தமான கேள்வி ஓரளவு காரணமாக அமைந்தது.** இதற்கு, முக்கிய சந்தைக்கு பொருட்களை வழங்குவதில் அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவற்றுக்கிடையேயும் காணப்பட்ட உயர்ந்த போட்டியும், இலங்கையின் ஏற்றுமதிப் போட்டித்தன்மையினை ஓரளவிற்கு குறைத்துவிட்ட ஒப்பீட்டுரீதியில் உயர்வான உற்பத்திச் செலவும் ஐ.அ.டொலருக்கெதிராக யூரோவும் ஐ.இ.பவுண்ணும் கடுமையாக தேய்வடைந்தமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. முதல் மூன்று காலாண்டுகளிலும் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியுற்ற கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, எதிர்கால வாய்ப்புக்களை மோசமடையச் செய்த உலகளாவியரீதியில் வியாபித்த ஐ.அமெரிக்காவின் நெருக்கடிகளைத் தொடர்ந்து உலகளாவிய கேள்வி குறைவடைந்தமையே காரணமாகும்.

**ஆடை ஏற்றுமதிகள் அண்மைக் காலத்தில் எய்தப்பட்ட ஏறத்தாழ 6 - 8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஐ.அ.டொலர் 3,469 மில்லியனுக்கு 3.9 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்தில் வளர்ச்சியுற்றது.** ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளுக்கான மிகப் பெரிய தனியொரு சந்தையாக தொடர்ந்தும் விளங்கி ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 45 சதவீதத்திற்கு வகைகூறிய போதும் ஐக்கிய அமெரிக்காவின் ஆடை இறக்குமதிகளில் இலங்கையின் பங்கு 2008இல் வீழ்ச்சியடைந்தது.

**அண்மைய ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க சந்தையின் வீழ்ச்சியடைந்து செல்கின்ற வளர்ச்சியானது, இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளுக்கான இரண்டாவது பாரிய சந்தையாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மிகக் கூடுதலான விரிவாக்கத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு எதிரீடு செய்யப்பட்டது.** ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு இலங்கையரின் ஏற்றுமதியாளர்களுக்கு சுதந்திரமான சந்தை நுழைவுகளை வழங்கிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் பக்கபலமாக விளங்கியது. ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களிடையே ஐக்கிய இராச்சியம் இலங்கை ஏற்றுமதிகளுக்கான பாரிய சந்தையாக விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து முறையே இத்தாலியும் சேர்மனியும் விளங்கின. முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் எதிர்காலம் தொடர்பாக ஆண்டின் நடுப்பகுதியில் நிலவிய நிச்சயமற்றதன்மையினால் சில தயாரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

**2008ஆம் ஆண்டுப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள், வைரம் மற்றும் ஆபரணங்கள் போன்ற கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெரும்பாலானவைகளிலிருந்தான வருவாய்கள் விரிவடைந்தன.** நீர்க்கல எரிபொருள்

**அட்டவணை 5.4** **ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு**

| வகை | 2007(அ) பெறுமதி ஐ.அ.டொ மில் | 2007(அ) பங்கு % | 2008(ஆ) பெறுமதி ஐ.அ.டொ மில் | 2008(ஆ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் (ஆ) ஐஅ.டொ மில் | வளர்சி வீதம்% (ஆ) | வளர்ச்சிக்கான பங்களிப்பு % (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **1,507.2** | **19.7** | **1,854.8** | **22.8** | **347.6** | **23.1** | **70.0** |
| தேயிலை | 1,025.2 | 13.4 | 1,271.5 | 15.6 | 246.3 | 24.0 | 49.6 |
| இறப்பர் | 109.4 | 1.4 | 125.1 | 1.5 | 15.7 | 14.4 | 3.2 |
| தெங்கு | 141.2 | 1.8 | 171.0 | 2.1 | 29.8 | 21.1 | 6.0 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 60.3 | 0.8 | 82.4 | 1.0 | 22.0 | 36.6 | 4.4 |
| ஏனையவை | 80.9 | 1.1 | 88.7 | 1.1 | 7.8 | 9.6 | 1.6 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 231.5 | 3.0 | 287.3 | 3.5 | 55.7 | 24.1 | 11.2 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **5,967.3** | **78.1** | **6,159.5** | **75.7** | **192.2** | **3.2** | **38.7** |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 513.5 | 6.7 | 458.3 | 5.6 | -55.1 | -10.7 | -11.1 |
| புடவைகளும் ஆடைகளும் | 3,339.6 | 43.7 | 3,468.7 | 42.6 | 129.1 | 3.9 | 26.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 168.9 | 2.2 | 254.8 | 3.1 | 85.9 | 50.9 | 17.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 482.5 | 6.3 | 541.9 | 6.7 | 59.4 | 12.3 | 12.0 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 47.1 | 0.6 | 49.0 | 0.6 | 2.0 | 4.2 | 0.4 |
| தோல், பயணப்பொருட்களும் காலணியும் | 22.9 | 0.3 | 16.7 | 0.2 | -6.3 | -27.3 | -1.3 |
| பொறியும் கருவியும் | 542.2 | 7.1 | 461.0 | 5.7 | -81.2 | -15.0 | -16.4 |
| வைரம் மற்றும் ஆபரணங்கள் | 367.2 | 4.8 | 436.1 | 5.4 | 68.8 | 18.7 | 13.9 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 483.6 | 6.3 | 473.1 | 5.8 | -10.5 | -2.2 | -2.1 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **127.8** | **1.7** | **122.4** | **1.5** | **-5.4** | **-4.2** | **-1.1** |
| இரத்தினக்கற்கள் | 105.5 | 1.4 | 101.0 | 1.2 | -4.4 | -4.2 | -0.9 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 22.4 | 0.3 | 21.4 | 0.3 | -1.0 | -4.4 | -0.2 |
| **பாகுபடுத்தப்படாதவை** | **37.6** | **0.5** | **0.0** | **0.0** | **-37.6** | **-100.0** | **-7.6** |
| **மொத்த ஏற்றுமதிகள் (இ) (ஈ)** | **7,640.0** | **100.0** | **8,136.7** | **100.0** | **496.7** | **6.5** | **100.0** |
| ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் | 110.6232 | | 108.3338 | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) மீள் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(ஈ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி


தொடர்பான வியாபாரத்தினைப் பொறுத்தவரை தென்னாசிய பிராந்தியத்தில் மிகச் சிறந்த துணைப் பணியினை வழங்குபவர் என்ற நிலையினை தக்கவைத்துக்கொள்ள பணிகளில் போட்டித்தன்மையினையும் வினைத்திறனையும் அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். ஆண்டின் தொடக்கத்தில் முன்னேற்றங்கள் அடையப்பட்ட போதும் இயற்கை இறப்பரிலிருந்து தயாரிக்கப்பட்ட திண்ம டயர்கள் மற்றும் ஏனைய உற்பத்திகளைக் கொண்ட நாட்டின் ஏற்றுமதிகள் ஆண்டின் பிற்பகுதியில் பாதிக்கப்பட்டன. இதற்கு பாரிய தயாரிப்பாளர்களான குறிப்பாக முக்கிய ஊர்தித் தயாரிப்பாளர்களான ஐ.அமெரிக்கா மற்றும் யப்பானின் உற்பத்திகள் குறைக்கப்பட்டமையே காரணமாகும். இலங்கையில் வைரங்கள் கிடைக்காத போதும், ஏறத்தாழ 6 - 8 சதவீத பெறுமதிகூட்டலுடன் ஐ.அ.டொலர் 418.7 மில்லியன் ஏற்றுமதிகளுடன், நாடானது வைரம் பதனிடும் முன்னணி நிலையமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது. இலங்கை, மிக கௌரவமான சில்லறை வைர விற்பனையாளர்கள் வசிக்கும் இடமான 'அன்ற்வேர்ப்' இல் உயர்தர வைரம் வெட்டுவதற்கான நற்பெயரைச் சம்பாதித்திருக்கிறது. 2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் இரத்தினக்கல் கைத்தொழிலிருந்தான வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களித்தமை, தேவைப்படும் மூலப்பொருட்களின் இறக்குமதிக்குப் பயன்படுத்தப்படுவதற்காக இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி வங்கிக் கணக்கிற்கு ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் 50 சதவீதத்தினை வரவு வைக்க அனுமதித்தமை மற்றும் தற்போதுள்ள வருமான வரிக்குப் பதிலாக தாழ்ந்த வருமான வரியான 2.5 சதவீதத்தை விதித்தல் என்பனவற்றின் மூலம் இரத்தினக்கல் கைத்தொழிலுக்கான பெறுமதிகூட்டலை மேம்படுத்தியது.

## இறக்குமதிச் செயலாற்றம்

**இறக்குமதிகள் மீதான செலவினம் 2007இன் ஐ.அ.டொலர் 11,296 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 14,008 மில்லியனுக்கு 24.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** பன்னாட்டுப் பண்ட விலைகளில் காணப்பட்ட மிகக்கூடிய அளவு அதிகரிப்புக்கள் 2008இன் முதல் மூன்று காலாண்டுகளில் இறக்குமதிகள் 33.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைவதற்கு இட்டுச் சென்றன. அதன்பின்னர் இறக்குமதிகள், உலகளாவிய பொருளாதார நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளும் மிக விரைவாக வளர்ச்சிடைந்த போது பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்புக்கள் 2008 செத்தெம்பர் வரை இறக்குமதிச் செலவினத்தில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. பெற்றோலியம் உட்பட பெரும்பாலான பண்டங்களின் விலைகள் இக்காலப்பகுதியில் வரலாற்றிலேயே மிக உயர்ந்த தொடர்ச்சியான அதிகரிப்புக்களைக் காட்டின. இவ்வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பு இடைநிலைப் பொருட்களிலிருந்து கிடைத்தது. இதற்கு, மொத்த இறக்குமதிகளின் சதவீதப் பங்களிப்பாக பார்க்கையில் பெற்றோலிய இறக்குமதிகள் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினம் 2007இன் 22 சதவீதத்திலிருந்து 2008இல் 24 சதவீதத்திற்கு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். எனினும், ஆண்டின் இறுதியில் உலகளாவிய பொருளாதார நெருக்கடி பெற்றோலியம் மற்றும் ஏனைய பண்டங்களின் உலகளாவிய கேள்வி கணிசமாக வீழ்ச்சியடைய வழிவகுத்தது. இறுதிக் காலாண்டில் விலைகளில் ஏற்பட்ட எதிர்பாராத வீழ்ச்சி இறக்குமதிச் செலவினத்தின் மீது சாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் 61.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த பெற்றோலிய இறக்குமதிகள் நான்காம் காலாண்டில் 25.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு நான்காம் காலாண்டில் பன்னாட்டுச் சந்தையில் விலைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். பெற்றோலியம் மற்றும் மற்றைய இறக்குமதிகள் மீதான செலவினத்தில் விளைவிக்கப்பட்ட குறைப்பு இறக்குமதிகளிலான வளர்ச்சி மிக விரைவாக மெதுவடைய வழிவகுத்ததுடன் இறுதிக் காலாண்டில் சமதள வீதத்தைப் பதிவு செய்தது.

**இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 8,341 மில்லியனுக்கு 28 சதவீதத்தினால் அதிகரித்து 2008இன் இறக்குமதி வளர்ச்சியை நோக்கி 67 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது.** பெற்றோலியம் தவிர, 2008இல் பதிவு செய்யப்பட்ட வளமாக்கி இறக்குமதி மீதான செலவினத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு பன்னாட்டுச் சந்தையில் நிலவிய உயர்ந்த விலைகள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வளமாக்கி உதவுதொகையினால் உருவாக்கப்பட்ட அதிகரித்த அளவுகளும் வழிவகுத்தன. 2008இல் இறக்குமதி செய்யப்பட்ட வளமாக்கியில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினை யூரியா உள்ளடக்கியிருந்ததுடன் இது இலங்கையில் நெல் உற்பத்தியாளர்களிடையே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

வரைபடம் 5.4 பண்டங்களின்படி இறக்குமதிகள்



**அட்டவணை 5.5** **இறக்குமதிகளின் உள்ளமைப்பு**

| வகை | 2007(அ) | | 2008(ஆ) | | பெறுமதியில் மாற்றம் (ஆ) ஐ.அ.டொ மில் | வளர்ச்சி வீதம் % (ஆ) | வளர்ச்சிக்கான பங்களிப்பு % (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொ மில் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொ மில் | பங்கு % | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **2,001.8** | **17.7** | **2,549.2** | **18.2** | **547.4** | **27.3** | **20.2** |
| உணவும் குடிபானங்களும் | 1,064.8 | 9.4 | 1,505.0 | 10.7 | 440.3 | 41.3 | 16.2 |
| அரிசி | 38.7 | 0.3 | 43.8 | 0.3 | 5.1 | 13.0 | 0.2 |
| சீனி | 154.1 | 1.4 | 206.2 | 1.5 | 52.1 | 33.8 | 1.9 |
| கோதுமை | 233.9 | 2.1 | 375.5 | 2.7 | 141.6 | 60.5 | 5.2 |
| ஏனையவை | 638.0 | 5.6 | 879.5 | 6.3 | 241.6 | 37.9 | 8.9 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 937.1 | 8.3 | 1,044.2 | 7.5 | 107.1 | 11.4 | 4.0 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **6,517.3** | **57.7** | **8,340.6** | **59.5** | **1,823.3** | **28.0** | **67.2** |
| பெற்றோலியம் | 2,500.7 | 22.1 | 3,368.2 | 24.0 | 867.5 | 34.7 | 32.0 |
| வளமாக்கி | 192.5 | 1.7 | 576.6 | 4.1 | 384.1 | 199.5 | 14.2 |
| இரசாயனங்கள் | 281.4 | 2.5 | 361.1 | 2.6 | 79.7 | 28.3 | 2.9 |
| ஆடைகளும் புடவைகளும் | 1,632.2 | 14.4 | 1,701.9 | 12.1 | 69.7 | 4.3 | 2.6 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,910.5 | 16.9 | 2,332.8 | 16.7 | 422.3 | 22.1 | 15.6 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **2,685.2** | **23.8** | **2,978.8** | **21.3** | **293.7** | **10.9** | **10.8** |
| பொறியும் கருவியும் | 1,246.7 | 11.0 | 1,307.7 | 9.3 | 60.9 | 4.9 | 2.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 364.5 | 3.2 | 406.7 | 2.9 | 42.2 | 11.6 | 1.6 |
| கட்டடப் பொருட்கள் | 780.3 | 6.9 | 931.6 | 6.7 | 151.3 | 19.4 | 5.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 293.6 | 2.6 | 332.9 | 2.4 | 39.3 | 13.4 | 1.4 |
| **பகுக்கப்படாத இறக்குமதிகள்** | **92.2** | **0.8** | **139.4** | **1.0** | **47.2** | **51.1** | **1.7** |
| **மொத்த இறக்குமதிகள் (இ)** | **11,296.5** | **100.0** | **14,008.0** | **100.0** | **2,711.5** | **24.0** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம்** | 110.6232 | | 108.3338 | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை
(இ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட இலங்கை ஐ.ஓ.சி (த) கம்பனி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் மா ஆலை
இலங்கை மத்திய வங்கி

வேளாண்மை விலைகளில் காணப்பட்ட சாதகமான போக்குகள் சிறிய நிலங்களில் பயிர் செய்வதற்கு வேளாண்மையாளர்களைத் தூண்டி, வளமாக்கித் தேவைப்பாடுகளின் மீது மேலதிக அழுத்தங்களைத் தோற்றுவித்தன. 2008இல் ஐ.அ.டொலர்கள் 1,702 மில்லியனிற்கு வகை கூறிய புடவைகள் மற்றும் ஆடைகளின் இறக்குமதிகள் 2007 இனை விட 4.3 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பினை மட்டும் கொண்டிருந்து, ஆடை ஏற்றுமதிகளின் மெதுவான வளர்ச்சியை எடுத்துக்காட்டியது.

**2008இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 2,549 மில்லியனுக்கு 27.3 சதவீதத்தால் அதிகரித்தது.** நுகர்வுப் பொருள் வகையில், உணவு மற்றும் குடிபானம் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து பண்டங்களின் விலைகள் பெருமளவிற்கு அதிகரிப்பதற்கு முன்நிலவிய கோதுமை, பால், சீனி மற்றும் அரிசி என்பனவற்றின் உயர்ந்த விலைகளைப் பிரதிபலித்தன. 2008இல் கோதுமையின் இறக்குமதி அளவு 3.5 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. 2008இல் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் 16.2 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் இதற்கு, 2007 இலிருந்து அரச ஊழியர்களுக்கு தீர்வையற்ற ஊர்திகள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமையே காரணமாக இருந்தது. இவ்வசதி அதன் பின்னர் 2008 ஏப்பிறலில் புறக்கீடு செய்யப்பட்டது.

**முதலீட்டுப் பொருட்களின் வகை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து 2008இல் ஐ.அ.டொலர் 2,979 மில்லியன்களாக விளங்கி 10.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு கட்டடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே வழிவகுத்தன.** இதற்கு, நாடு முழுவதும் பெரும் எண்ணிக்கையான பாரியளவு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களே காரணமாகும். வெளிநாட்டு உதவிப் பயன்பாட்டு வீதத்தில் காணப்பட்ட சாதகமான அபிவிருத்தி, வெளிநாட்டு உதவிகளைச் சரியான முறையில் பயன்படுத்தியமை, உதவிக் கடப்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவும் இவ் வெளிப்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தன. எனினும், ஆண்டின் இறுதியில் தற்பொழுது இருந்து வரும் கொடுகடன் நெருக்கடியின் காரணமாக தோன்றிய குறைந்த வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டு நிதியிடல் என்பன அரசு மற்றும் தனியார் துறையினால் ஏற்கனவே தொடங்கப்பட்ட சில உட்கட்டமைப்பின் மீதான செலவிடல்களை பாதித்துள்ளன. சீனா மற்றும் இந்தியா போன்ற தோற்றம் பெற்றுவரும் சந்தைகளின் கட்டடவாக்க வேலைகளின் வேகம் மெதுவடைந்தமையின் காரணமாகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்பட்ட மந்தநிலை காரணமாகவும் ஆண்டின் பிற்பகுதியில் தோன்றிய மூலதனப் பொருட்களின் குறைந்த பன்னாட்டு விலைகள் 2009இன் பெரும்பகுதி வரைக்கும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 5.6 முக்கிய இறக்குமதிகளின் அளவு (அ)**

' 000 மெற்றிக்தொன்

| விடயம் | 2004 | 2005 | 2006 | 2007(ஆ) | 2008(இ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **222** | **52** | **12** | **88** | **84** |
| 1ஆம் காலாண்டு | 9 | 43 | 3 | 4 | 41 |
| 2ஆம் காலாண்டு | 9 | 4 | 2 | 7 | 28 |
| 3ஆம் காலாண்டு | 4 | 2 | 3 | 3 | 12 |
| 4ஆம் காலாண்டு | 200 | 3 | 4 | 74 | 3 |
| **கோதுமை** | **993** | **864** | **1,200** | **952** | **919** |
| 1ஆம் காலாண்டு | 257 | 272 | 287 | 204 | 272 |
| 2ஆம் காலாண்டு | 218 | 191 | 321 | 388 | 312 |
| 3ஆம் காலாண்டு | 189 | 174 | 331 | 274 | 153 |
| 4ஆம் காலாண்டு | 329 | 227 | 261 | 87 | 182 |
| **சீனி** | **438** | **418** | **525** | **481** | **575** |
| 1ஆம் காலாண்டு | 98 | 49 | 112 | 112 | 163 |
| 3ஆம் காலாண்டு | 173 | 167 | 137 | 138 | 131 |
| 3ஆம் காலாண்டு | 71 | 94 | 127 | 118 | 167 |
| 4ஆம் காலாண்டு | 96 | 108 | 149 | 113 | 114 |
| **பெற்றோலியம்(மசகெண்ணெய்)** | **2,200** | **2,008** | **2,151** | **1,938** | **1,853** |
| 1ஆம் காலாண்டு | 586 | 586 | 592 | 272 | 229 |
| 2ஆம் காலாண்டு | 464 | 581 | 535 | 557 | 525 |
| 3ஆம் காலாண்டு | 634 | 246 | 582 | 559 | 544 |
| 4ஆம் காலாண்டு | 516 | 595 | 442 | 550 | 555 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்** | **1,645** | **1,823** | **2,302** | **2,314** | **2,386** |
| 1ஆம் காலாண்டு | 460 | 314 | 540 | 597 | 778 |
| 2ஆம் காலாண்டு | 380 | 396 | 587 | 646 | 583 |
| 3ஆம் காலாண்டு | 341 | 711 | 479 | 517 | 465 |
| 4ஆம் காலாண்டு | 464 | 402 | 696 | 554 | 560 |
| **வளமாக்கி** | **510** | **529** | **633** | **569** | **773** |
| 1ஆம் காலாண்டு | 54 | 168 | 166 | 62 | 125 |
| 1ஆம் காலாண்டு | 164 | 111 | 203 | 171 | 223 |
| 3ஆம் காலாண்டு | 76 | 142 | 119 | 131 | 216 |
| 4ஆம் காலாண்டு | 216 | 107 | 146 | 205 | 209 |

(அ) சீராக்கப்பட்டுள்ளது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட இலங்கை ஐ.ஓ.சி (த) கம்பனி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் மா ஆலை

## வர்த்தக நிலுவை

**ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியானது 2008இல் வர்த்தகப்பற்றாக்குறை கணிசமாக விரிவடையக் காரணமாக அமைந்தது.** திரண்ட வர்த்தகப் பற்றாக்குறை 2007இன் ஐ.அ.டொலர் 3,656 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 5,871 மில்லியனுக்கு 60.6 சதவீதத்தினால் விரிவடைந்தது.


## வர்த்தக மாற்றுவிகிதம்

**வேளாண்மை ஏற்றுமதிகளினால் சாதகமான விலைகள் அடையப்பட்ட போதும், குறிப்பாக பெற்றோலியத்தினால் வழிநடத்தப்பட்ட பன்னாட்டுப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வு 2008இல் வர்த்தக மாற்று விகிதம் 10.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு மோசமடையக் காரணமாயிற்று.**


**2008இல் ஏற்றுமதிகளின் விலைகள் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன.** இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மாதாந்த சராசரி விலை தொடர்ந்தும் உயர்வடைந்து, 2008 செத்தெம்பரில் கிலோகிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.28 கொண்ட முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவு செய்தது. எனினும், மந்தநிலை தோற்றம் பெற்றமை செழிப்பான விலையை முடிவுக்குக் கொண்டு வந்தமையால் இவை செத்தெம்பர் இறுதியிலிருந்து, வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை எடுத்தன. இலங்கைத் தேயிலைக்கான குறைந்த கேள்வி, முக்கியமாக இலங்கைத் தேயிலையின் முக்கிய வாங்குநர்களான பிரதான எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் எண்ணெய் விலைகளிலான எதிர்பார்க்கப்படாத வீழ்ச்சியின் வருமான விளைவுகளால் ஏற்பட்டது. உலகின் எஞ்சிய பகுதியிலிருந்தான கேள்வி நிலைமையை மோசமாக்கிய உலக மந்தநிலையால் பாதிக்கப்பட்டது. 2008இல் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் சராசரி விலை 2007ஆம் ஆண்டில் பெறப்பட்ட கிலோகிறாம் ஒன்றிற்கான சராசரி விலையான ஐ.அ.டொலர் 3.29 உடன் ஒப்பிடுகையில் கிலோகிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 3.98 ஆகக் காணப்பட்டது. தேயிலையைப் போலவே, 2008இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இயற்கை இறப்பரின் ஏற்றுமதிகள் கவர்ச்சிகரமான விலைகளை ஈர்த்தன. ஐ.அ.டொலர் 3.24 கொண்ட உயர்ந்த ஏற்றுமதி விலைகள் 2008 யூலையில் பதிவு செய்யப்பட்டதுடன் அதன் பின்னர் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்தன. இறப்பரின் சராசரி ஏற்றுமதிகள், 2007இன் கிலோக்கிறாமொன்றிற்கான சராசரி விலையான ஐ.அ.டொலர் 2.12 உடன் ஒப்பிடுகையில் 2008இல் கிலோக்கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.57 ஆகக் காணப்பட்டது. இக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, செயற்கை இறப்பரின் உற்பத்திச் செலவினை அதிகரித்த உயர்ந்த மசகெண்ணெய் விலைகளையும், உலகின் மிகப் பாரிய இறப்பர் நுகர்வாளரும் டயர் ஏற்றுமதியாளருமான சீனாவிலிருந்து உயர் உற்பத்திக்கு ஏற்பட்ட வலுவான கேள்வியையும் பிரதிபலித்தது. எனினும், இவ்வாண்டின் பிற்பகுதியில் எண்ணெய் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி செயற்கை இறப்பரின் குறைந்த விலைகளில் பிரதிபலிக்கப்பட்டது. தேங்காயினதும், கறுவா, மிளகு, கராம்பு, புகையிலை போன்ற மற்றைய வேளாண்மை உற்பத்திகளினது ஏற்றுமதி விலைகளும் 2008இல் அதிகரித்தன.

**2008இல் இறக்குமதி விலைகள் 18.7 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன.** பலமான ஐக்கிய அமெரிக்க நுகர்வு மற்றும் அண்மைய உலகளாவிய வளர்ச்சிக்கு முக்கிய ஆதாரமாக விளங்கிய சீனா, இந்தியா மற்றும் ஏனைய தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களிலிருந்தான அதிகரித்துச் செல்லும்

**வரைபடம் 5.5 வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்கள்**



**வரைபடம் 5.6** நாடுகளின்படி ஏற்றுமதிகள்





கேள்வியால் உந்தப்பட்டு வழங்கல் கேள்வியுடன் இணைந்து செல்ல முடியாததால் பொருட்களின் விலைகள் நூற்றாண்டிலான அவற்றின் உயர் மட்டங்களை 2008இல் அடைந்தன. மசகெண்ணெய் விலைகளிலான கூர்மையான அதிகரிப்பு உணவு மற்றும் உலோகங்கள் உள்ளிட்ட ஏனைய முதன்மைப் பொருட்களுக்குப் பரவி, இவற்றின் விலைகள் 2008இன் நடுப்பகுதி வரை தொடர்ந்து பெருமளவில் அதிகரித்தன. 2008 யூலை வரை மசகெண்ணெய் விலைகள் உலக சந்தை விலைகளுக்கு இணைவாக கடுமையாக அதிகரித்ததுடன் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 134.34 கொண்ட மிக உயர்ந்த சராசரி இறக்குமதி விலையினைப் பதிவு செய்த பின்னர் 2008 திசெம்பரில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 46.27 இற்கு மிக வேகமாக வீழ்ச்சியடைந்தது. 2008 யூலையில் கோதுமையின் சராசரி இறக்குமதி விலை மெற்றிக்தொன்னொன்று ஏறத்தாழ ஐ.அ.டொலர் 454.59 ஆக விளங்கி 1970களின் நடுப்பகுதியின் பின்னர் மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவு செய்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2008இல் சீனியின் விலைகளும் பன்னாட்டுச் சந்தையில் அதிகரித்திருக்கின்றன. 2008இல் பல நாடுகளிலும் சீனிக்குப் பதிலாக தானியங்களின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக சீனி உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. எனினும், 2008இன் இறுதியை நோக்கி, உலகளாவிய நிதியியல் நெருக்கடி, பொருளாதார வீழ்ச்சி என்பவற்றின் மத்தியில் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்து இந்நூற்றாண்டில் மிகவும் குறிப்பிடத்தக்க விலை ஊசலாட்டத்தை ஏற்படுத்தியது.

### வர்த்தகத்தின் போக்கு

**2008இல் இலங்கையின் ஏற்றுமதிகள் சென்றடையும் முக்கிய நாடுகளாக மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில், ஆசிய நாடுகள் இலங்கையின் முக்கிய இறக்குமதி நாடுகளாக ஆதிக்கம் கொண்டிருந்தன.** ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் இலங்கையின் பாரிய ஏற்றுமதி நாடுகளாக விளங்கிய வேளையில், சிங்கப்பூர், ஈரான், சீனா என்பவற்றைத் தொடர்ந்து இந்தியாவும் மிக முதன்மை வாய்ந்த இறக்குமதி நாடுகளாக விளங்குகின்றன.

**முக்கியமான ஏற்றுமதி நாடுகளிடையே, ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கான மிக முக்கியத்துவம் வாய்ந்த சந்தையாக விளங்கி, ஏற்றுமதிகளில் 23 சதவீதத்திற்கு வகை கூறியது.** ஆடை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறைப்பின் முக்கிய காரணமாக ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகள் 2008இல் 5.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2008இல் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2008இல் ஐரோப்பிய வலயத்திற்கான ஏற்றுமதிகள் 12.5 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியத்தில், இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி நாடான ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் 2008இல் 7.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில், இத்தாலி மற்றும் பெல்ஜியம் - லக்சம்போர்க்கிற்கான ஏற்றுமதிகள் முறையே 12.7 சதவீதத்தினாலும் 6.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நாடுகளுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்தமைக்கு முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை+ திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகளே காரணமாகும். 2007இல் மூன்றாவது பாரிய ஏற்றுமதி நாடாக விளங்கிய இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் 18.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையினைத் தொடர்ந்து 2008இல் ஐந்தாவது இடத்திற்கு கீழே இறங்கியது. இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் முக்கியமாக மரக்கறிக் கொழுப்பு, வாசனைத் திரவியங்கள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் இரத்தினக்கற்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**வரைபடம் 5.7** நாடுகளின்படி இறக்குமதிகள்



**எனினும், இறக்குமதிகளின் அடிப்படையில், இந்தியா தொடர்ந்தும் இறக்குமதிகளின் பாரிய மூலமாக விளங்கியதுடன் அதன் இறக்குமதி 31.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, 2007இன் இறக்குமதிப் பங்கான 23 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் இலங்கையின் இறக்குமதிகளில் ஏறத்தாழ 25 சதவீதத்திற்கு வகை கூறியது.** உயர்ந்த இறக்குமதிகளினால் தூண்டப்பட்டு, இந்தியாவுடனான மொத்த வர்த்தகம் 2008இல் ஐ.அ.டொலர் 3.9 பில்லியன்களை விஞ்சியதன் மூலம் முக்கியமான வர்த்தகப் பங்காளர் நாடு என்ற தனிச் சிறப்பான இடத்தினை இந்தியா பிடித்துக் கொண்டது. இந்தியாவிலிருந்தான பிரதான இறக்குமதிகளாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், சீனி, உந்து ஈருருளிகள், முச்சில்லு வண்டிகள், செப்புக் கம்பிகள் போன்றன காணப்பட்டன. சிங்கப்பூரும் ஈரானும் இரண்டாவது மற்றும் மூன்றாவது முக்கிய இறக்குமதி மூல நாடுகளாக விளங்கி முறையே 11.1 சதவீத மற்றும் 41.5 சதவீத வளர்ச்சி வீதங்களைப் பிரதிபலித்தன. அவை மொத்த இறக்குமதிகளில் 8.9 சதவீதத்திற்கும் 8.5 சதவீதத்திற்கும் வகை கூறின. சீனா, கொங்கொங் என்பனவும் கூட இலங்கைக்கான குறிப்பிடத்தக்க இறக்குமதி மூலங்களாக விளங்கி இறக்குமதியில் முறையே 7.8 சதவீதம், 5.0 சதவீதப் பங்குகளைக் கொண்டிருக்கின்றன.

## 5.4 பணிகளிலுள்ள வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

### பணிகளிலுள்ள வர்த்தகம்

**பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மிகை 2007இன் ஐ.அ.டொலர் 302 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 402 மில்லியனுக்கு கணிசமாக விரிவடைந்தது.** 2008இல் போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள், கட்டுமாணம் மற்றும் காப்புறுதிப் பணிகள் மிகைகளைப் பதிவு செய்தன. இம் முன்னேற்றங்கள், மற்றைய வியாபாரப் பணிகள் மற்றும் பயணத்தில் ஏற்பட்ட பற்றாக்குறையின் அதிகரிப்புக்களினால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டன.

### போக்குவரத்துப் பணிகள்

**பணிகள் துறையிலுள்ள மிகப் பெரிய வகையான போக்குவரத்துப் பணிகள், பணிகள் துறையின் வளர்ச்சிக்கு முக்கியமாக வழிவகுத்தன.** உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் மெதுவான போக்கு காணப்பட்ட போதும் பயணிகள் கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள் மற்றும் ஏனைய துறைமுகங்களுடன் தொடர்பான நடவடிக்கைகளை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 22.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. எனினும், குறைவடைந்த பயணிகள் போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து, பயணிகள் கட்டணங்கள் மற்றும் கப்பற் கட்டணங்கள் என்பனவற்றில் ஏற்பட்ட குறைப்பு என்பன உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்பட்ட விரைவான வீழ்ச்சியைப் பிரதிபலித்து பொருளாதார மெதுவடைவில் பரந்தளவு தாக்கத்தினை ஏற்படுத்தியமையின் முக்கிய காரணமாக இறுதிக் காலாண்டில் வளர்ச்சி வீதம் மோசமடைந்தது. இறுதிக் காலாண்டில் காணப்பட்ட மெதுவான போக்கு 2008இல் போக்குவரத்துப் பணிகள் ஐ.அ.டொலர் 999 மில்லியனுக்கு 19.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. அதேவேளை, போக்குவரத்தின் பேரிலான

**அட்டவணை 5.7 தேறிய பணிகள், வருமானம் மற்றும் மாற்றல்கள் (அ)**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் 2007 | ஐ.அ.டொலர் மில்லியன் 2008(ஆ) | ரூபா மில்லியன் 2007 | ரூபா மில்லியன் 2008(ஆ) |
|---|---|---|---|---|
| 1. போக்குவரத்து | 241 | 299 | 26,728 | 32,458 |
| 2. பயணம் | -8 | -86 | -851 | -9,297 |
| 3. தொடர்பூட்டல் பணிகள் | 18 | 26 | 1,984 | 2,756 |
| 4. கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள் | 175 | 230 | 19,359 | 24,917 |
| 5. கட்டடவாக்கப் பணிகள் | 27 | 35 | 3,015 | 3,774 |
| 6. காப்புறுதிப் பணிகள் | 15 | 22 | 1,681 | 2,337 |
| 7. ஏனைய வியாபாரப் பணிகள் | -153 | -109 | -17,029 | -11,757 |
| 8. அரச செலவினம் வே.எ.கு | -14 | -14 | -1,531 | -1,508 |
| **மொத்தப் பணிகள்** | **302** | **402** | **33,357** | **43,680** |
| 1. ஊழியர்களின் இழப்பீடு | -11 | -14 | -1,240 | -1,483 |
| 2. நேரடி முதலீடு | -346 | -464 | -38,287 | -50,256 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -1 | -495 | 472 | -53,293 |
| **மொத்த வருமானம்** | **-358** | **-972** | **-39,054** | **-105,032** |
| 1. தனியார் | 2,214 | 2,565 | 245,006 | 277,711 |
| 2. பொது அரசு | 97 | 101 | 10,677 | 10,928 |
| **மொத்த நடைமுறை மாற்றல்கள்** | **2,311** | **2,666** | **255,684** | **288,639** |

(அ) இவ் வெளிப்படுத்துகை ப.நா. நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லுகின்றது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வெளிப்பாய்ச்சலும், ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய உயர்ந்த பயணிகள் மற்றும் சரக்கு கட்டணங்களுக்கு இணையாக 17.3 சதவீதத்தினால் அதிகரித்தன.

**பயணிகள் கட்டணங்களிலிருந்தான மொத்த உட்பாய்ச்சல் அதிகரித்தமைக்கு எரிபொருள் மேலதிக கட்டணங்களினால் இட்டுச்செல்லப்பட்ட வானூர்திக் கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** எனினும், ஆண்டின் இறுதிப்பகுதியில், பயணிகள் கட்டணங்களின் மீதான வருவாய்கள், உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கினைத் தொடர்ந்து கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் போன்றவற்றிற்கான பயணங்களும் அவற்றுடன் சேர்ந்து வியாபாரம் தொடர்பான பயணங்களும் சுருக்கமடைந்தமையின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. மீட்சி வழிமுறைகளாக, மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வான் போக்குவரத்து தொழில்துறைக்கு உத்வேகமொன்றினை அளிக்கும் பொருட்டு வான் போக்குவரத்து தொழில்துறையானது சரக்கு போக்குவரத்து, உணவு வழங்கல், தரையில் வானூர்திகளைக் கையாளல், பொறியியல் பணிகள் மற்றும் வான்கல பொறியியலாளர்களுக்கு பயிற்சியளித்தல் போன்ற புதிய உற்பத்தியாக்க வழிவகைகளுள் நுழைவது பற்றி பரிசீலித்து வருகின்றது. மேலும், சிறிலங்கன் எயார்லைன்சினால் மேற்கொள்ளப்படும் வளர்ந்து வரும் இந்திய சந்தைகளை இலக்காகக் கொண்ட பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் புதிதாகக் கட்டப்பட்ட சரக்கு கையாளல் முனைக் கோடியின் தொழிற்பாடுகள் சரக்கு கையாளலின் இயலளவை உத்வேகப்படுத்தும்.

**வளர்ச்சியடைந்துவரும் இந்திய பொருளாதாரம் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் கிடைக்கும் மேம்பட்ட பணி வழங்கல் என்பவற்றின் காரணமாக அதிகரித்த மாற்றிக் கப்பலேற்றலின் பெறுபேறாக துறைமுகம் சார்ந்த நடவடிக்கைகளின் பேரிலான**

**மொத்த உட்பாய்ச்சல்கள் அதிகரித்தன.** 2008ஆம் ஆண்டில் கொள்கலன்களின் மாற்றிக் கப்பலேற்றல் கையாளல் ஏறத்தாழ 11.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியைத்தக்க வைத்துக் கொள்வதற்கும், இப்பிராந்தியத்திலுள்ள போட்டிமிக்க துறைமுகங்களிலிருந்து வரும் எதிர்கால சவால்களை வெற்றிகரமாக சமாளிப்பதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் தொழிற்பாடுகளை மேம்படுத்திக் கொண்டதுடன் அதன் உற்பத்தித் திறனையும் அதிகரித்தது.

### பயணம் மற்றும் சுற்றுலா

**2008இல் சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சி உத்வேகம் மந்தமான நிலையில் காணப்பட்டது. மொத்த சுற்றுலா வருகைகள் 2007இல் 494,008 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2008இல் 438,475 ஆக விளங்கி 11.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** ஆண்டின் தொடக்கத்தில் வருகைகள் முக்கியமாகப் பாதிக்கப்பட்டமைக்கு, சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நாடுகள் சிலவற்றினால் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் விளங்கியதுடன் ஆண்டு முன்னேறிச் செல்கையில் இத்தகைய காரணிகளுடன் நிதியியல் சந்தைக் குழப்ப நிலையை ஏற்படுத்திய உலகளாவிய பொருளாதார மந்தநிலை இணைந்து கொண்டது. 2008இல் வருகைகளில் காணப்பட்ட வீழ்ச்சிகள் தென்னாசியா, மேற்கு ஐரோப்பா அதேபோன்று வட அமெரிக்கா கிழக்காசியா, கிழக்கு ஐரோப்பா மற்றும் அவுத்திரேலியா ஆகிய முக்கிய சந்தைகள் தொடர்பானவற்றில் பதிவு செய்யப்பட்டன. மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2007இன் ஐ.அ.டொலர் 385 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 342 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. வருகைகளின் நோக்க நியதிகளில் 2008இன் 438,375 சுற்றுலா வருகை தருவோரில் பெரும்பாலானவர்கள் (73.2 சதவீதம்) விடுமுறை நோக்கங்களுக்காக நாட்டிற்கு வருகை தந்த வேளையில் 8.5 சதவீதத்தினர் வியாபார நோக்கங்களுக்காக வருகை தந்தனர். 8.3 சதவீதத்தினர் நண்பர்கள் உறவினர்களைப் பார்ப்பதற்காக விஜயம் செய்ததாகக் குறிப்பிட்ட வேளையில் 2.6 சதவீதமானவர்கள் சமய மற்றும் கலாச்சார நோக்கங்களுக்காக விஜயம் செய்தனர். 1.3 சதவீதத்தினர் மாநாடு மற்றும் கூட்டங்களுக்காக வந்தவர்களாவர்.

**பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை சுற்றுலாவினை மேம்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது.** வளர்ச்சியடைவதற்குரிய உள்ளார்ந்த வளத்தைக் காட்டிய நான்கு முக்கிய சந்தைகளான இந்தியா, ஐக்கிய இராச்சியம், ருசியா மற்றும் மத்திய கிழக்கு ஆகிய நாடுகளின் மீது முக்கிய கவனம் செலுத்தி 2008 இலிருந்து 2010 வரையான காலப்பகுதிக்காக சந்தைப்படுத்தல் உபாயம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாக் கைத்தொழிலை மீட்சிப்படுத்துவதற்காக பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. வீழ்ச்சியடைந்து செல்லும் சுற்றுலாக் கைத்தொழிலுக்குப் புத்துயிரளிப்பதற்கு உதவுவதற்காக கடன்களை மீள் அட்டவணைப்படுத்தல், 15 சதவீத எரிபொருள் மேலதிக கட்டணம் மற்றும் பொருளாதார மேலதிகக் கட்டணம் என்பனவற்றை தளர்த்தல் என்பன உள்ளிட்ட தூண்டல் பொதியொன்றையும் அரசாங்கம் வழங்கியுள்ளது. 2008இன் நடுப்பகுதியிலிருந்து விரைவாக மெதுவடையத் தொடங்கிய பன்னாட்டு சுற்றுலாவின் வளர்ச்சி 2009இலும் தொடர்ந்து உலகளாவிய பொருளாதார சூழ்நிலை மோசமடைவதன் தாக்கத்தினை பிரதிபலிக்கிறது. எனினும், இரு தசாப்தங்களுக்கு பின்னர் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் மிக விரைவில் முடிவடையவுள்ளதனால், சுற்றுலாத்துறை, சவால் நிறைந்த உலகளாவிய தோற்றப்பாட்டிற்கிடையிலும் பொருளாதாரத்தில் மிகத் தாக்கம் நிறைந்த துறையாக தோற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### தொலைத் தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பணிகள்

**2008இல் தொலைத் தொடர்பூட்டல்களிலிருந்தான தேறிய வருவாய்கள் ஏறத்தாழ 42 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் மின்னஞ்சல், விரிவாக்கப்பட்ட இணையத்தள வசதி, செய்மதி தொலைக்காட்சி மற்றும் பன்னாட்டு நேரடி தொலைபேசி என்பனவற்றின் அதிகரித்த பயன்பாட்டுடன் தொலைத் தொடர்பூட்டல் பணிகள் கணக்கிலான வெளிப்பாய்ச்சல்கள் குறைந்த வீதத்திலாயினும் தொடர்ந்து அதிகரித்தது.** சந்தைக்குள் புதிதாக நுழைந்தவர்களின் தீவிரமான போட்டியின் காரணமாக தொலைத் தொடர்பூட்டல் தொழிற்கூடங்களின் செல்லிட மற்றும் பொருத்தப்பட்ட தொலைபேசிகள் இரண்டினதும் பன்னாட்டு

**அட்டவணை 5.8 — சுற்றுலாவின் செயலாற்றம்**

| விடயம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(ஆ) | வளர்ச்சி வீதம் % 2007(அ) | வளர்ச்சி வீதம் % 2008(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகை | 566,202 | 549,308 | 559,603 | 494,008 | 438,475 | -11.7 | -11.2 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 5,742 | 4,754 | 5,793 | 4,940 | 4,165 | -14.7 | -15.7 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 59.3 | 45.4 | 47.8 | 46.2 | 43.9 | -3.3 | -5.0 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ. மில்லியன்) | 42,059 | 36,377 | 42,586 | 42,571 | 37,094 | 0.0 | -12.9 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 74,283 | 66,223 | 76,100 | 86,175 | 84,598 | 13.2 | -1.8 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) | 129,038 | 125,004 | 133,558 | 145,239 | 124,456 | 8.7 | -14.3 |
| நேரடி | 53,766 | 52,085 | 55,649 | 60,516 | 51,857 | 8.7 | -14.3 |
| மறைமுகம் | 75,272 | 72,919 | 77,909 | 84,723 | 72,599 | 8.7 | -14.3 |

(அ) திருத்தியமைக்கப்பட்டுள்ளது
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

அழைப்புக் கட்டணங்களில் ஏற்பட்ட குறைப்பு பன்னாட்டு நேரடி தொலைபேசிக் கட்டணங்களைக் குறைத்து பன்னாட்டு நேரடி தொலைபேசியின் பாவனை வளர்ச்சியுற வசதியளித்தது.

**இலங்கை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற வணிகச் செய்முறை, வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற அறிவுச் செய்முறை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பணிகள் உட்பட மென்பொருள் அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகள் போன்ற சிறப்பியல்பு வாய்ந்த பணிகளுக்கு வெளியிலிருந்து பணிகளை வழங்குகின்ற மிகச் சாதகமான கரைகடந்த நாடாக இலங்கை தோற்றம் பெற்று வருகின்றது**. இத் துறையானது 2007இன் ஐ.அ.டொலர் 175 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 230 மில்லியனுக்கு ஏறத்தாழ 31 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தது. இலங்கையின் மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகளின் ஏற்றுமதிக்கான முதல் முக்கிய மூன்று சந்தைகளாக ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் தென்னாசியா என்பன காணப்பட்ட போதும் ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் சந்தைப் பங்குகளை விரிவாக்குவதற்கு போதுமான உள்ளார்ந்த வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மற்றையவற்றை விட குறைவான தொழிற்பாட்டுச் செலவுகள், அதிகரித்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள், தேர்ச்சிபெற்ற தொழிற்படை கிடைக்கத்தக்கதாகவுள்ளமை, பணிகள் வரிகள் மீதான சலுகைகள் காரணமாக போட்டிரீதியான விலைகள் மற்றும் தரமான பணிகளை வழங்கல் என்பன உலகளாவிய நிதியியல் குழப்பங்களுக்கிடையிலும் கைத்தொழில் வளர்ச்சிப் போக்கு தாக்குப்பிடிப்பதற்கு வசதியளித்தன. 2008ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகள் துறைகளுக்கு மேலும் தூண்டுதலளிக்கும் சூழ்நிலைகளை உருவாக்குவதற்காக சிறப்பு தகவல் தொழில்நுட்ப வலயங்களை உருவாக்குவதுடன் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை மேலும் மேம்படுத்தல், தொழில் முயற்சி அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் தொடர்பாக சனாதிபதி செயலணிக்குழுவினை நியமித்தல் என்பனவற்றின் மூலமாக பல்வேறு முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிறுவப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பணிகள் பூங்காவானது மென்பொருள் அபிவிருத்திக்கான கம்பனிகளுக்கான தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்குப் புறம்பாக ஆரம்ப நிலையிலுள்ள கம்பனிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் அல்லது தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகளின் தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்குத் தேவைப்படும் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் கொண்டுள்ள பேணிக்காக்கும் மையங்களை வழங்குவதன் மூலமாக அவற்றிற்கு உதவியும் வசதியும் வழங்குவதன் ஊடாக அதன் தோற்றப்பாட்டினை விரிவாக்கியுள்ளது. கணக்கியல் மற்றும் சட்டம் இரண்டிலும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளும் செய்முறைத் துறைகளிலுள்ள சிறப்பியல்பு வாய்ந்த பணிகளை, “தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் என்பனவற்றிற்கான ஆண்டு” என 2009ஐ அலுவல்சார் ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக கிடைக்கக்கூடிய கைத்தொழில் வாய்ப்புக்களை பயன்படுத்தும் விதத்தில் நன்கு தகைமை பெற்ற தொழில்சார் நிபுணர்களை ஏற்கனவே கொண்டுள்ள தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணி வழங்குவோரின் தகைமையை உயர்த்துவதற்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**எனினும், உயர்ந்த சந்தைகளில், அதாவது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா என்பனவற்றின் பொருளாதாரம் மெதுவடைந்தமையின் காரணமாக, இனிவரும் ஆண்டுகளில் இத்துறை மெதுவான போக்கினைக் கொண்டிருக்கும் போல் தோன்றுகின்றது.** கடந்த சில மாதங்களாக இச்சந்தைகளில் வேலை இழப்புக்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துச் செல்வதும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வதிலும் பார்க்க உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் பாதுகாப்பு வழிமுறைகளை மேற்கொண்டிருப்பதும் இலங்கையில் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகளுக்கான கேள்விகள் பாதிப்படையக் காரணமாகும்.

### வருமானத்தின் உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்

**வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2007ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 358 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 972 மில்லியனுக்கு விரிவடைந்தது.** 2008இல் அலுவல்சார் ஒதுக்குகளின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் ஏறத்தாழ 9.0 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 96 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த உலகளாவிய வட்டி வீதங்களும் அலுவல்சார் ஒதுக்குகள் படிப்படியாகக் குறைவடைந்தமையும் முக்கிய காரணங்களாகும். மேலும், 2008 யூரோ மற்றும் இசுடேர்லிங் பவுண் போன்ற முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் மிக உயர்வடைந்தமையும் பிணையங்களின் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையும் ஐ.அ.டொலர் நியதிகளில் சந்தைப் பெறுமதிப்படியான மதிப்பீட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகளில் பெறுமதி இழப்புக்களைத் தோற்றுவித்தது. இதேபோன்று, வர்த்தக வங்கிகள் உட்பட தனியார் துறையின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருவாய்கள், 2008இல் நிலவிய தாழ்ந்த உலகளாவிய வட்டி வீதங்களின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, வருமானக் கணக்குகளின் வெளிப்பாய்ச்சல் ஏறத்தாழ 17 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 940 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாபங்களை தாய் நாட்டிற்கு அனுப்புவது ஐ.அ.டொலர் 470 மில்லியனுக்கு ஏறத்தாழ 35 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தமை காரணமாகும். எனினும், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் தாய் நாட்டிற்கான அனுப்பல்கள், வெளிநாட்டு நேரடி முதலீட்டு தொழிற் முயற்சிகளின் ஏற்கனவேயுள்ள தொழிற்பாடுகளினை விரிவாக்குவதற்காக அத்தகை முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள் முதலீடுகளுக்கான எதிரீட்டு பதிவுகளையும் உள்ளடக்கியிருந்தன.

### நடைமுறை மாற்றல்கள்

**உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2008இல் ஐ.அ.டொலர் 2,918 மில்லியன்களாக விளங்கி 16.7 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.** இவ்வதிகரிப்பிற்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2008இல் 16 சதவீதத்தினால் அதிகரித்தமையும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் வருமானத்தில் ஏற்பட்ட உயர்வின் விளைவான மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள குடிபெயர்ந்தோரின் சராசரிக் கூலிகளில்

ஏற்பட்ட அதிகரிப்பும் கொரியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற உயர் கூலிகளைக் கொண்ட நாடுகளுக்கு புலம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகரித்தமையும் முக்கிய காரணங்களாக விளங்கின. மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையில் இலங்கை படைகளும் நிறுத்தப்பட்டிருப்பதும் உள்ளகப் பணவனுப்பல்களை உத்வே கப்படுத்தியிருக்கின்றன. மத்திய வங்கியின் வழிகாட்டல்களின் கீழ், வர்த்தக வங்கிகள், வங்கித்தொழில் வழிமுறைகளினூடாக பணத்தினை மாற்றல் செய்வதிலுள்ள நன்மைகள் தொடர்பாக குடிபெயர்ந்தோர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவனூடாக கூடியளவு பணவனுப்பல்களைத் திரட்டிக் கொள்வதற்கும் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் முக்கிய நாடுகள் பலவற்றில் பணவனுப்பல்களை திரட்டிக் கொள்வதற்காக மேலதிக வங்கி அலுவலர்களை நியமிப்பதற்கும் புதிய வழிமுறைகளை மேற்கொண்டமையும் 2008இல் பணவனுப்பல்கள் அதிகரிக்க உதவின.

**தற்பொழுது நிலவுகின்ற உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் காரணமாக உயர் கூலிகளைப் பெறுகின்ற குடிபெயர்ந்த தொழிலாளர்கள் சிலர் தேவைக்கதிகமாக பணம் அனுப்பியிருக்கக்கூடிய சாத்தியங்களும் உண்டு.** எனினும், 68 சதவீதமான இலங்கை குடிபெயர்ந்த தொழிலாளர்கள் தேர்ச்சியற்ற தொழிலாளர்களாகவுள்ள வேளையில், 24 சதவீதத்தினர் மற்றும் 8 சதவீதத்தினர் முறையே தேர்ச்சியுள்ள மற்றும் ஓரளவு தேர்ச்சியுள்ள, தொழில்சார் நிபுணத்துவ வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். மேலும் இலங்கையின் குடிபெயர்ந்த தொழிலாளர்களில் 85 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் மத்திய கிழக்கு நாடுகளில் பரந்துள்ளவிடத்து சிறு தொகையினர் மாத்திரம் பொருளாதார மந்தமாக காணப்படும் ஐரோப்பாவிலும் மேலைத்தேய நாடுகளிலும் பணிபுரிகின்றனர். மிகச் சிறிய விகிதத்தினர் மட்டுமே மந்த நிலைமையினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் தொழில்புரிகின்ற அதேவேளையில், பெரும்பான்மையானோர் குறைந்த கூலிகளை உழைக்கின்ற தொழில்களில் ஈடுபட்டிருப்பதனால் 2009இல் பணவனுப்பல்களில் நிலையான பாய்ச்சலொன்று காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### நடைமுறைக் கணக்கு நிலுவை


**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2007இன் ஐ.அ.டொலர் 1,401 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 3,775 மில்லியனுக்கு இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தமைக்கு முன்னெப்பொழுதும் இல்லாதவிதத்திலான உயர்ந்த இறக்குமதி செலவினத்தின் காரணமாக அதிகரித்த வர்த்தகப் பற்றாக்குறையே காரணமாகும்.** நடைமுறைக் கணக்கு, 2007இன் மொ.உ.உற்பத்தியில் 4.3 சதவீதத்திலிருந்து 2008இன் மொ. உ.உற்பத்தியில் 9.3 சதவீதத்திற்கு மோசமடைந்தது. ஆண்டின் முதலரைப் பகுதியில் நிலவிய வரலாற்றிலேயே மிக உயர்ந்த பெற்றோலிய மற்றும் பண்டங்களின் விலைகள், வர்த்தகப் பற்றாக்குறை 2008 இறுதியில் ஐ.அ.டொலர் 5,871 மில்லியன் கொண்ட பற்றாக்குறை பதிவு செய்யப்படக் காரணமாயிற்று. எனினும், வலுவான தொழிலாளர் பணவனுப்பல்களும் பணிகள் துறையின் சிறப்பான செயலாற்றமும் விரிவடைந்து செல்லும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்த உதவின. உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை நாட்டின் உயர்ந்த சேமிப்பு முதலீட்டு இடைவெளியினைப் பிரதிபலித்தது. நீண்டகால உற்பத்தியாக்க முதலீட்டுத் தேவைக்குப் போதுமான சேமிப்புக்கள் கிடைக்காமையானது, இனிவரும் ஆண்டுகளில் உயர்ந்த வீத வளர்ச்சியை தொடர்ச்சியாக எய்துவதற்கு கணிசமான வெளிநாட்டு மூலதனத்தின் தேவையினை குறிப்பிடுவதாயிருக்கிறது.

## 5.5 மூலதன மற்றும் நிதியியல் பாய்ச்சல்களும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு நேரடி முதலீடு

**வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீடுகள் அதிகரித்தமையின் முக்கிய காரணமாக 2008இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் உயர்ந்த மட்டங்களைப் பதிவு செய்தது.** உபாயரீதியானதொரு தேர்வு முறையாக வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள் முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு, பாதுகாப்பு நிலைமைகள் மேம்பட்டுள்ளன என எதிர்பார்க்கப்படுகின்றதொரு சூழலில், நாட்டின் எதிர்கால பொருளாதார வாய்ப்புக்களில் தற்போதுள்ள வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்கள் வைத்திருந்த நம்பிக்கையினை காட்டுவதாகவுள்ளது. உலகளாவிய பொருளாதார நெருக்கடிமிக்க சூழலில் பெரும்பாலான நாடுகள் புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை எதிர்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கின. எனவே, நெருக்கடியான சூழலொன்றில் கூட வைத்திருக்கப்பட்ட வருவாய்களை மீள முதலீடு செய்துள்ளமையில் ஏற்பட்ட அதிகரிப்பானது, குறிப்பாக, இலங்கையின் பொருளாதார வாய்ப்புக்களில் கொண்டிருந்த உயர்ந்த நம்பிக்கையினை காட்டுவதாகவுள்ளது. இதன் விளைவாக, 2008இல் முதலீட்டுச் சபை ஒப்புதலளித்த கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் உட்பட மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் 2007இல் ஐ.அ.டொலர் 734 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஐ.அ.டொலர் 889 மில்லியன் கொண்ட உச்சமட்டத்தினைப் பதிவு செய்தது. 2008இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் பங்குடமையாளர்களின் ஐ.அ.டொலர் 131 மில்லியன் கொண்ட பங்கு மூலதனத்தையும் ஐ.அ.டொலர் 110 மில்லியன் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்களையும், கம்பனிகளுக்கிடையேயான ஐ.அ.டொலர் 101 மில்லியன் கடன்பாடுகளையும் ஐ.அ.டொலர் 137 மில்லியன் கொண்ட வெளிநாட்டு கடன்பாடுகளையும் ஏற்கனவேயுள்ள கம்பனிகளினால் அவர்களின் வருவாய்களிலிருந்து மீள்

வரைபடம் 5.8 மூலதன மற்றும் நிதியியல் கணக்கிற்கான பிரதான உட்பாய்ச்சல்கள்



முதலீடாக மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 410 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, சில கம்பனிகள் இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டில் முதலிட ஆர்வம் கொண்டிருந்தமையினால் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் 2007இன் ஐ.அ.டொலர் 55 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 62 மில்லியனுக்கு அதிகரித்தது.

**ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையில் மிதமான வீழ்ச்சி காணப்பட்ட போதும், 2008இல் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுக் கடப்பாடுகள் அதிகரித்தன. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் அநேகமானவை தொலைத் தொடர்பூட்டல் மற்றும் தயாரிப்புத்துறைகளில் ஈடுபட்டன.** உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் மலேசியாவிலிருந்து ஐ.அ.டொலர் 150 மில்லியனாக பதிவு செய்யப்பட்டதுடன் இதனைத் தொடர்ந்து ஐ.அ.டொலர் 126 மில்லியனுடன் இந்தியாவும் காணப்பட்டது.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சல்களின் நீண்ட காலத் தன்மையானது, ஊகத் தன்மை வாய்ந்த குறுங்கால நிதியியல் பாய்ச்சல்களையும் விட முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை பிரதிபலிக்கிறது.** வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு மாறாக, குறுங்கால நிதியியல் பாய்ச்சல்கள் தளம்பலுடையனவாகவும் குறிப்பாக நெருக்கடியான சூழ்நிலையில் சடுதியான மீளப் பெறல் இடர்நேர்வுக்குட்பட்டதாகவும் இருக்கிறது. ஆகவே, உயர்மட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு கூடியளவு நவீனத்துவமான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குதல், சொத்துரிமை, புதிய முதலீடுகளுக்கான நிலங்களை விரைவாக ஒதுக்குதல், பிணக்குகளுக்கு சிறந்த விரைவான தீர்வுகளைக் காணுதல் மற்றும் தொழிலாளர்களை பெருமளவிற்கு திரட்டுதல் என்பனவற்றின் மூலமாக இயலுமை வாய்ந்த, தாராளமயமான வியாபாரச் சூழலொன்றினை உருவாக்குவது தவிர்க்க முடியாததாகும்.

## அரசிற்கான வெளிநாட்டு மூலதனம்

### நடுத்தர மற்றும் நீண்ட காலம்

**2008இல் கடன்கள் மற்றும் கொடைகள் இரண்டினையும் உள்ளடக்கிய அரசிற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்தமைக்கு உலகளாவிய நிதியியல் நெருக்கடியால் வெளிநாடுகளால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கு இணைக்கிணை நிதியங்களின் பற்றாக்குறை முக்கிய காரணமாகும்.** ஆண்டின் இறுதிப்பகுதியில் நிலவிய உலகளாவிய நெருக்கடிகளின் விளைவாக சில வர்த்தகக் கடன்கள் கிடைக்கப்பெறாத போதும், 2007இன் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008ஆம் ஆண்டுப்பகுதியில் அரசாங்கம் ஐ.அ.டொலர் 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களையும் கொடைகளையும் திரட்டக் கூடியதாக இருந்தது. இது ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான முறிகளின் பெறுகைகளையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் அரசிற்கான மொத்த நீண்டகால மற்றும் நடுத்தரகாலக் கடன்களின் உட்பாய்ச்சல் 2007இன் ஐ.அ.டொலர் 1,290 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,059 மில்லியனாக விளங்கியது. 2008இல் பெறப்பட்ட மொத்தக் கடனில் 604 மில்லியன் (57 சதவீதம்) சலுகை நியதிகளில்

**அட்டவணை 5.9**

**2008இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன்வழங்குநரும் செயற்றிட்டமும் | | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | **247.0** |
| இதில் | கொழும்பு துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம் | 42.9 |
| | வலுத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 21.4 |
| | தென்மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் - துணை | 19.2 |
| | இரண்டாம்நிலை நகரங்கள் மற்றும் கிராமிய சமூகத்தின் நீர் / உடல்நலம் - துணை 1 | 16.7 |
| | இரண்டாம்நிலை நகரங்கள் மற்றும் கிராமிய சமூகத்தின் நீர் / உடல்நலம் | 15.3 |
| | இறை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 15.0 |
| | தென்மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் - துணை | 11.9 |
| | தேசிய பெருந்தெருக்கள் துறைச் செயற்றிட்டம் | 11.0 |
| **வங்கி ஆஸ்திரியா கிரடிடன்ஸ்டல்ற் ஏ.ஜி** | | **27.7** |
| இதில் | ஐந்து பாலங்களது கட்டுமாணத்தின் மூலம் வீதி உட்கட்டமைப்பை விரிவாக்குதலும் வலுப்படுத்தலும் | 9.7 |
| **டன்ஸ்கி வங்கி ஏ/ஸ்** | | **14.1** |
| இதில் | கண்டியின் தென்நகரங்களின் நீர் வழங்கல் செயற்றிட்டம் | 14.1 |
| **ஐரோப்பிய முதலீட்டு வங்கி** | | **28.7** |
| இதில் | டி.எவ்.சி.சி உலகக்கடன் II | 15.1 |
| **பிரான்சிய அரசாங்கம்** | | **20.8** |
| இதில் | திருகோணமலை இணைந்த உட்கட்டமைப்புச் செயற்றிட்டம் | 10.7 |
| **யப்பானிய அரசாங்கம்** | | **262.9** |
| இதில் | தென்மாகாண பெருந்தெரு கட்டுமாணச் செயற்றிட்டம் | 60.7 |
| | மேல் கொத்மலை நீர்மின்வலு செயற்றிட்டம் | 57.0 |
| | மாகாண வீதி மேம்படுத்தல் செயற்றிட்டம் | 17.6 |
| | வளவை கங்கை இடது கிளை நீர்ப்பாசனம் மற்றும் விரிவாக்கச் செயற்றிட்டம் II | 16.9 |
| | வலுத்துறை மீள்கட்டமைப்புச் செயற்றிட்டம் (கரவலப்பிட்டிய) | 16.1 |
| | சூழலுக்கு சிநேகபூர்வமான தீர்வு நிதியம் II | 12.1 |
| | லுனாவை சூழல் மேம்படுத்தல் மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்றிட்டம் | 11.8 |
| | வறியோருக்கான கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | 11.4 |
| | கொழும்பு நகர மின்சார மாவட்ட அபிவிருத்தி செயற்றிட்டம் | 10.7 |
| | கொழும்பு பெரும்பாகத்திற்கான களுகங்கை நீர்வழங்கல் செயற்றிட்டம் | 10.2 |
| **சீன மக்கள் குடியரசு அரசாங்கம்** | | **40.4** |
| இதில் | முன்னுரிமை கொண்ட வாங்குநர்களுக்கான கொடுகடன் | 23.2 |
| | 15 எண்ணிக்கையான டீசல் பல்லின அலகுகளது வழங்கல் | 10.6 |
| **ஏச்.எஸ்.பி.சி வங்கி பி.எல்.சி (ஐக்கிய இராட்ச்சியம்)** | | **32.4** |
| இதில் | பிராந்திய பாலத்தின் செயற்றிட்டம் ஏச்.எஸ்.பி.சி வங்கி பி.எல்.சி (ஐக்கிய இராச்சியம்) | 23.4 |
| **வரையறுக்கப்பட்ட ஏச்.எஸ்.பி.சி (கொங்கொங்)** | | **26.3** |
| இதில் | பிராந்திய பாலத்தின் செயற்றிட்டம் ஏச்.எஸ்.பி.சி வங்கி கொங்கொங் | 26.3 |
| **பன்னாட்டு அபிவிருத்திச் சம்மேளனம்** | | **95.3** |
| இதில் | வீதித்துறை ஆதரவுச் செயற்றிட்டம் | 45.2 |
| | வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்கட்டமைப்பு செயற்றிட்டம் | 20.2 |
| **ஸ்பெயின் இராச்சியம்** | | **20.1** |
| இதில் | காலியிலும் நீர்கொழும்பிலும் இரண்டு நீர் சுத்திகரிப்பு பொறிகளின் வழங்கலை வடிவமைத்தலும் உருவாக்குதலும் | 13.5 |
| **டென்மார்க் நோர்டியா வங்கி ஏ/எஸ்** | | **28.6** |
| இதில் | ஒலுவில் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம் | 15.8 |
| | களனி வலது கிளை நீர் சுத்திகரிப்புப் பொறி | 12.8 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
வெளிநாட்டு மூலவளத் திணைககளம்

பெறப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 455 மில்லியன் (43 சதவீதம் ) சலுகையற்ற அல்லது வர்த்தகக் கடன் நியதிகளில் பெறப்பட்டன. சலுகை ரீதியான கடன் உட்பாய்ச்சல்களில் பெரும்பாலானவை கொழும்பு துறைமுகத்தின் விரிவாக்கம், தென்பகுதி விரைவுப்பாதை மற்றும் புதிய அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமாணம் போன்ற உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் விரைவாக நடைமுறைப்படுத்துவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டன. முக்கியமான செயற்றிட்டங்கள் விரைவாக நடைமுறைக்கிடப்பட்ட போதும், 2008இல் வெளிநாட்டு உதவியின் பயன்பாட்டு வீதம்[1] 20.6 சதவீதத்திலிருந்து 20.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு, இவ்வாண்டுக் காலத்தில் புதிய செயற்றிட்டங்களுக்கான புதிய உதவிக் கடப்பாடுகள் கணிசமாக அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். அதேவேளை, அரசாங்கத்தினால் செய்யப்பட்ட நீண்டகாலக்கடன் மீள்கொடுப்பனவுகள் 2008இல் ஐ.அ.டொலர் 807 மில்லியன்களுக்கு 30.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2005இல் பரிஸ் கழக உறுப்பினர்களினால் பிற்போடப்பட்ட படுகடன்களின் மீள்கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும். இவை 2006இல் தொடங்கி ஏழு தவணைகளில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். நடைமுறை மற்றும் மூலதன தன்மைகள் இரண்டையும் உள்ளடக்கிய மொத்தக் கொடைகள் 2007இன் ஐ.அ.டொலர் 277 மில்லியனிலிருந்து 2008இல் 289 மில்லியனுக்கு அதிகரித்தன. சுனாமியினால் சேதமாக்கப்பட்ட உட்கட்டமைப்பினை மீள் நிருமாணிப்பதற்காக 2008இல் அரசாங்கம் கணிசமானளவு தொகைக் கொடைகளைத் தொடர்ந்தும் பெற்றது.

### குறுங்காலம்

**வெளிநாட்டவர்களினால் அரச திறைசேரி உண்டியல்களிலும் முறிகளிலும் செய்யப்பட்ட முதலீடுகளின் பேரிலான குறுங்கால தேறிய உட்பாய்ச்சல் 2008 செத்தெம்பரளவில் அதன் உச்சமட்டமான ஐ.அ.டொலர் 185 மில்லியனை அடைந்தது.** எனினும், உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்தமையினைத் தொடர்ந்து முதலீட்டாளர்கள் மீளப்பெறத் தொடங்கியதன் காரணமாக, 2008 செத்தெம்பர் இறுதிவரை பதிவு செய்யப்பட்ட தேறிய உட்பாய்ச்சல் சடுதியாக மாற்றமுற்று ஐ.அ.டொலர் 213 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுக்கு மாற்றமடைந்தது. வெளிநாட்டவர்களின் அரச முறிகளின் பேரிலான குறுங்கால தேறிய வெளிப்பாய்ச்சல் 2007இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 372 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஐ.அ.டொலர் 264 மில்லியன்களாக விளங்கியது. மூலதனக் கணக்கை மேலும் தாராளமயப்படுத்தும் ஒரு பகுதியாக, அரசாங்கம் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதியில் உயர்ந்த பட்சம் 10 சதவீதம் வரையிலான அளவிற்கு முதலீடு செய்வதற்கு 2008 மே மாதம் தொடக்கம் வெளிநாட்டவர்கள் அனுமதிக்கப்பட்டனர். திறைசேரி உண்டியல் சந்தையின் தாராளமயமாக்கல் விளைவாக, திறைசேரி உண்டியலின் பேரிலான தேறிய உட்பாய்ச்சல் 2008இல் ஐ.அ.டொலர் 51 மில்லியனாகக் காணப்பட்டது. எனினும், குறுங்கால மூலதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ள திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் மீதான முதலீடு, உலகளாவிய நிதியியல் தோற்றப்பாடுகளின் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப எளிதில் பாதிப்படையக்கூடிய தன்மை மற்றும் 2008 செத்தெம்பரில் தீவிரமடைந்த நிதியியல் நெருக்கடிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளை ஒடுக்கி தாய்நாட்டிற்கு அனுப்புவதை விரைவடையத் தூண்டின. 2008 ஒத்தோபர் - திசெம்பர் காலப்பகுதியில் மொத்தமாக ஐ.அ.டொலர் 430 மில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் மீளப் பெறப்பட்டன. இம்முதலீடுகளை ஒடுக்கிவிடுவதனால் தோன்றும் உடனடிச் செலாவணி தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் பொருட்டும், முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையினை உருவாக்கும் விதத்திலும் மத்திய வங்கி அந்நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட கடன்கரைப்பு நிதியமொன்றினைப் பயன்படுத்தியது. இது வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்தாமல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நிதியினை மீளப்பெற்றுக் கொள்வதனை வசதிப்படுத்தும்.

## தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வெளிநாட்டு மூலதனம்

### நீண்ட காலம்

**2008இல் தனியார்துறைக்கான நீண்டகாலக் கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 265 மில்லியனுக்கு 33.2 சதவீதத்தினால் அதிகரித்தன.** 2008இல் உள்நாட்டு வட்டி வீதங்கள் ஒப்பீட்டு ரீதியில் உயர்வாக இருந்தமையினால் ஒரு சில முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு தனியார்துறை தொழில் முயற்சிகள், குறிப்பாக வலு மற்றும் சக்தி, தொலைத் தொடர்பூட்டல் மற்றும் நிதித்துறைகள் அவர்களின் வியாபாரத்தினை விரிவாக்குவதற்கு வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொண்டன.

### குறுங்காலம்

**சொத்துப்பட்டியல் முதலீடுகள், தனியார் குறுங்கால கொடுகடன்கள் மற்றும் வர்த்தக வங்கி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த தேறிய குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் 2007இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 205 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் 679 மில்லியனுக்கு கணிசமாக அதிகரித்தமைக்கு, பெற்றோலிய இறக்குமதிகளுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ஈரானிய தொடர் கொடுகடன் விரிவாக்கமே பெருமளவிற்கு காரணமாகும்.** 2008இல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், ஈரானிய தொடர் கொடுகடனான ஐ.அ.டொலர் 381 மில்லியன் உட்பட ஐ.அ.டொலர் 601 மில்லியன் தேறிய வர்த்தகக் கொடுகடனைப் பெற்றது.

**ஐ.அ.டொலர் 548 மில்லியன் கொண்ட சாதனைமட்ட மொத்த உட்பாய்ச்சல் காணப்பட்ட போதும் பங்குச் சந்தைக்கான தேறிய சொத்துப்பட்டியல் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2007இல் ஐ.அ.டொலர் 101 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஐ.அ.டொலர் 60 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.** ஊர்திகள் தயாரிப்பு, வங்கித்தொழில் மற்றும் நிதி, காப்புறுதி

1 வெளிநாட்டு உதவியில் பயன்பாட்டு வீதமென்பது 2008இல் வழங்கப்பட்டதற்கும் 2008 யூன் இறுதியில் ஒப்புக்கொள்ளப்பட்டும் வழங்கப்படாதுள்ள மீதிக்கும் இடையிலான விகிதத்தினால் அளவிடப்படுகின்றது

மற்றும் தொடர்பூட்டல் துறைகளிலுள்ள கம்பனிகள் உயர்ந்தளவு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்து கொண்டன. அசோசியேட் மோட்டர்வேய்ஸ் பிஎல்சி இன் முக்கிய பங்குடமைகளின் உடனடி விற்பனை மற்றும் சிறிலங்கா ரெலிகொம், நிப்பன் ரெலிகொம்யூனிகேசன் அன்ட் டெலிகிறாப் என்பனவற்றின் விற்பனை மற்றும் குளோபல் ரெலிகொம்யூனிகேசன் கோல்டிங்ஸ் இற்கான சிறுபங்கு உடமையாளர்களின் பங்குரிமை என்பன கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சலில் உயர்ந்த உட்பாய்ச்சலைக் கவர்ந்து கொண்டது. நிப்பன் ரெலிகொமினிகேசன் அன்ட் ரெலிகிறாப் லிமிடெட்டிலுள்ள சிறிலங்கா ரெலிகொம்மின் பங்குகளின் விற்பனை காரணமாக மொத்த வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 488 மில்லியனுக்கு அதிகரித்தன.

**வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2008இல் ஐ.அ.டொலர் 210 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் இலங்கை அபிவிருத்தி முறி போன்ற உள்நாட்டுச் சொத்துக்களுக்கு மாற்றப்பட்டமையே முக்கிய காரணமாகும்.** அதேவேளை, வர்த்தக வங்கிகளின் தேறிய பொறுப்புக்கள் 2008இல் ஐ.அ.டொலர் 185 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுக் காலத்தில் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் இரண்டினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணங்களாகும்.

### சென்மதி நிலுவை

**முன்னைய மூன்று ஆண்டுகளிலும் காணப்பட்ட சென்மதி நிலுவையின் சாதகமான போக்குகள் 2008இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதியிலும் தொடர்ந்தன.** சாதகமான வெளிநாட்டுச் சூழ்நிலையின் காரணமாக சென்மதி நிலுவை 2008இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் மிகையைப் பதிவு செய்து 2008 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 515 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்தது. எனினும், 2008 செத்தெம்பரில் உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்தமையானது வெளிநாட்டுத்துறையின் சாதகமாக அபிவிருத்திகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இது திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் மீதான முதலீடுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சடுதியாக மீளப் பெற்றுக்கொள்ளவும், குறுங்கால கொடுகடன் வசதிகள் மீதான அவசர கோரல்களுக்கும், வர்த்தக நிதியிடலில் கடுமையான வறிதுநிலை ஏற்படவும், ஐ.அ.டொலருக்கெதிராக முக்கியமான பன்னாட்டு நாணயங்கள் விரைவாக பெறுமதித்தேய்வடைந்ததன் காரணமாக தீவிரமான பெறுமதி இழப்புக்கள் ஏற்படவும் வழிவகுத்தது. இதன் விளைவாக, 2008 இறுதியில் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 1,225 மில்லியன் கொண்ட பற்றாக்குறைக்கு மாற்றமடைந்தது.

### வெளிநாட்டு ஒதுக்குகள்

**2008இன் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் 3 மாதங்களுக்கும் கூடுதலான இறக்குமதிகளுக்குப் போதுமான மட்டத்தில் மிக வசதியான அளவில் பேணப்பட்டன.** 2008 யூலையில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் தவிர்ந்த வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டமான ஐ.அ.டொலர் 3,558 மில்லியனுக்கு உயர்வடைந்து 3.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதை நிதியிடப் போதுமானதாக இருந்தது. அதன் பின்னர், உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள் தீவிரமடைந்தமைக்கேற்ப சென்மதி நிலுவையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக ஒதுக்குகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. 2008 இறுதியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய கொடுப்பனவுகளுடனும் கொடுப்பனவுகளில்லாமலும் முறையே ஐ.அ.டொலர் 2,561 மில்லியனுக்கும் ஐ.அ.டொலர் 1,753 மில்லியனுக்கும் வீழ்ச்சியடைந்தன. இதன்படி, ஆசிய தீர்ப்பனவுடனும் தீர்ப்பனவு

**அட்டவணை 5.10**

**இலங்கையின் வெளிநாட்டு சொத்துக்கள் (அ)**

| உடைமை | ஐ.அ.டொலர் மில்லியன் (ஆ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(இ) | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(இ) |
| 1. அரசு | 95 | 131 | 128 | 99 | 87 | 9,897 | 13,417 | 13,789 | 10,768 | 9,866 |
| 2. அரச முகவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | |
| 3. மத்திய வங்கி | 2,101 | 2,604 | 2,709 | 3,409 | 2,474 | 219,795 | 265,873 | 291,747 | 370,640 | 279,870 |
| 4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 2,196 | 2,735 | 2,837 | 3,508 | 2,561 | 229,693 | 279,290 | 305,536 | 381,408 | 289,736 |
| 5. வர்த்தக வங்கிகள் | 1,243 | 1,466 | 1,169 | 1,448 | 1,238 | 129,987 | 149,656 | 125,867 | 157,454 | 140,075 |
| 6 மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் | 3,438 | 4,201 | 4,005 | 4,956 | 3,799 | 359,680 | 428,946 | 431,403 | 538,862 | 429,810 |
| 7. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 3.3 | 3.7 | 3.3 | 3.7 | 2.2 | | | | | |
| 7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதிகள் | 2.9 | 3.3 | 2.9 | 3.3 | 2.0 | | | | | |
| 8 மொத்த சொத்துக்கள் மாதத்தில் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 5.2 | 5.7 | 4.7 | 5.3 | 3.3 | | | | | |
| 8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதிகள் | 4.5 | 5.0 | 4.1 | 4.7 | 2.9 | | | | | |

(அ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப்பெறுகைகள் உட்பட சந்தை விலையில் கணிக்கப்பட்டுள்ளன.


மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவப்படுத்தும் வீதங்கள் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா (ஆண்டிற்கான) | 104.61 | 102.12 | 107.71 | 108.72 | 113.14 |

(இ) தற்காலிகமானவை

வரைபடம் 5.9 காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்




இல்லாமலும் ஒதுக்குகள் 2008 இறுதியில் முறையே 2.2 மாதங்கள், 1.5 மாதங்களின் இறக்குமதிக்குச் சமமானதாக இருந்தன. குறுங்காலப் பொறுப்புக்களுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் விகிதத்தினால் அளவிடப்பட்டவாறான ஒதுக்குப் போதுமை 2007 இறுதியின் 79 சதவீதத்திலிருந்து 2008இல் 45 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் உட்பட நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 3,799 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

**2009இல் நாட்டின் ஒதுக்கு நிலைமையினை அதிகரிப்பதற்காக மத்திய வங்கி பல வழிமுறைகளை மேற்கொண்டது.** மத்திய வங்கி மூன்று நாடுகளுடன் நாணயத்தை ஒன்றுக்கொன்று பரிமாற்றுகின்ற ஒழுங்குகளுக்காக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. அத்தகைய ஒழுங்குகளின் கீழ் மத்திய வங்கி மலேசியாவிலிருந்து 2009 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 200 மில்லியனைப் பெற்றது. மேலும் ஒதுக்குகளை உத்வேகப்படுத்துவதற்காக ஏனைய பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடையே திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் மீதான ஊக்குவித்தல் மற்றும் வதியாதோர் வெளிநாட்டுக் நாணயக் கணக்கு மற்றும் வதிவோர் வெளிநாட்டுக் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்களை உயர் மட்டத்தில் தூண்டுவதற்காக அவற்றின் வட்டி மீது வழங்கப்பட்ட 20 சதவீத மிகையூதியம் அறிமுகப்படுத்தபட்டமை என்பன அவற்றுள் சிலவாகும்.

**மேலும், தற்போதைய உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் போது இலங்கைக்கு உதவியளிப்பதற்கு பன்னாட்டு நாணய நிதியம் (ப.நா.நி) முன்வந்தமைக்குப் பதிலளிக்கும் விதத்தில் அரசு ப.நா. நிதியத்திலிருந்தான துணைநில் ஒழுங்கு வசதியினைக் கோரியுள்ளது.** பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான அத்தகைய உதவி சென்மதி நிலுவை நோக்கங்களுக்காக இருப்பதுடன் இந் நிதியங்கள் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு பயன்படுத்தப்படும். அத்தகைய உதவிகள் மற்றைய அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான உதவிகளை அதிகரிப்பதற்கும் அதே போன்று இலங்கை மீதான பன்னாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்படுத்த உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.


## 5.6 வெளிநாட்டுப் படுகடனும் படுகடன் பணிகளும்

### வெளிநாட்டுப் படுகடன்

**கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கின் தொடர்ச்சியாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் நடுத்தர நீண்ட காலப் படுகடனையும் குறுங்காலப் படுகடனையும் உள்ளடக்கிய நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் 2007இன் 43.2 சதவீதத்திலிருந்து 2008இல் 37.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** ஐ.அ.டொலர் நியதிகளில், மொத்த வெளிநாட்டுப் படுகடன், இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பாரியளவு குறுங்காலப் படுகடன் மற்றும் மற்றைய வர்த்தகக் கடன்கள் என்பவற்றால் அடிப்படையில் உந்தப்பட்டு 2008இல் ஐ.அ.டொலர் 15,107 மில்லியனுக்கு ஏறத்தாழ 8.0 சதவீதத்தினால் அதிகரித்தன. வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப்படுகடனில் 37.2 சதவீதம் சிறப்பு எடுப்பனவு உரிமையிலும் 31.1 சதவீதம் யப்பானிய யென்னிலும் 19.6 சதவீதம் ஐ.அ.டொலரிலும் குறித்துரைக்கப்பட்டிருந்தன. ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களையும் வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் மற்றும் பொறுப்புக்கள் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2007இல் 51.0 சதவீதத்திலிருந்து 2008இல் 43.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் உண்மை நியதிகளில் 2008 இறுதியில் ஐ.அ.டொலர் 2,669 மில்லியனிற்கு 7.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

**வெளிநாட்டுப் படுகடனின் பெரும் பங்கிற்கு அரச படுகடன் தொடர்ந்தும் வகை கூறியது.** மொத்த, நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடனில், அரசாங்கப் படுகடன் 92 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் எஞ்சிய பங்கிற்கு தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களும் ப.நா. நிதியத்திற்கான படுகடன் கடப்பாடுகளும் வகை கூறின. மொத்த அரச வெளிநாட்டுப் படுகடனில் சலுகைரீதியான படுகடன்கள் ஏறத்தாழ 86 சதவீதத்திற்கு வகை கூறின. நாட்டின் வருமான மட்டம் மத்தியதர வருமான நிலைக்கு உயர்வடைந்துள்ளமையானது பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்தான சலுகை ரீதியான

வரைபடம் 5.10 வெளிநாட்டுப் படுகடன்



**அட்டவணை 5.11**

## வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடனும் வங்கித்தொழிற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(அ) | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(அ) |
| **1. நடுத்தர, நீண்டகாலப்படுகடன்** | **10,699** | **10,690** | **11,347** | **12,879** | **13,646** | **1,119,155** | **1,091,644** | **1,222,175** | **1,400,883** | **1,543,952** |
| 1.1 அரசு | 9,523 | 9,354 | 10,245 | 11,744 | 12,593 | 996,203 | 955,207 | 1,103,418 | 1,276,846 | 1.424.729 |
| 1.2 அரச கூட்டுத்தாபனங்களும் அரச உத்தரவாதத்துடனான தனியார்துறையும் | 507 | 567 | 465 | 345 | 251 | 52,986 | 57,912 | 50,065 | 37,501 | 28,429 |
| 1.3 அரச கூட்டுத்தாபனங்களும் அரச உத்தரவாதமற்ற தனியார்துறையும் | 411 | 388 | 393 | 539 | 634 | 42,944 | 39,588 | 42,376 | 58,553 | 71,715 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் | 258 | 381 | 244 | 251 | 169 | 27,023 | 38,937 | 26,316 | 27,933 | 19,079 |
| **2. குறுங்கால படுகடன்** | **647** | **664** | **634** | **1,111** | **1,460** | **67,726** | **67,759** | **68,286** | **120,748** | **165,207** |
| 2.1 அரசு (ஆ) | - | - | - | 457 | 212 | - | - | - | 49,641 | 24,006 |
| 2.2 ஏனையவை (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களும்) (இ) | 647 | 664 | 634 | 654 | 1,248 | 67,726 | 67,759 | 68,286 | 71,107 | 141,201 |
| **3. வங்கியியற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (ஈ)** | **1,429** | **1,666** | **1,994** | **2,493** | **2,669** | **149,492** | **170,170** | **214,802** | **271,063** | **301,950** |
| 3.1 மத்திய வங்கி | 1 | 1 | 3 | 2 | 1 | 128 | 131 | 284 | 219 | 64 |
| 3.2 வர்த்தக வங்கிகள் | 1,066 | 1,388 | 1,681 | 2,046 | 1,861 | 111,464 | 141,753 | 181,040 | 222,389 | 210,531 |
| 3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 362 | 277 | 311 | 446 | 808 | 37,899 | 28,286 | 33,478 | 48,454 | 91,355 |
| **4. மொத்த வெளிநாட்டுப்படுகடன் (1+2)** | **11,346** | **11,354** | **11,981** | **13,989** | **15,107** | **1,186,881** | **1,159,403** | **1,290,461** | **1,521,581** | **1,709,159** |
| **5. மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)** | **12,775** | **13,020** | **13,976** | **16,483** | **17,775** | **1,336,373** | **1,329,573** | **1,505,263** | **1,792,643** | **2,011,109** |
| **ஒப்பந்த குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள்** | | | | | | | | | | |
| செயற்றிட்டக்கடன்கள் | 7,702 | 7,416 | 9,087 | 10,002 | 11,148 | 805,646 | 757,262 | 978,356 | 1,087,359 | 1,261,304 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,763 | 1,655 | 867 | 1,064 | 740 | 184,467 | 169,038 | 93,331 | 115,697 | 83,703 |
| நிரம்பலாளர் கொடுகடன் | 240 | 283 | 435 | 679 | 705 | 25,123 | 28,907 | 46,877 | 73,790 | 79,722 |
| ப.நா.நி. எடுப்பனவுகள் | 258 | 381 | 244 | 251 | 169 | 27,023 | 38,937 | 26,316 | 27,933 | 19,079 |
| ஏனைய கடன்கள் (உ) | 735 | 955 | 718 | 884 | 885 | 76,896 | 97,500 | 77,295 | 96,054 | 100,145 |
| **குறுங்காலப்படுகடனும் வங்கித் தொழிற்துறைப் பொறுப்புக்களும்** | **2,077** | **2,330** | **2,628** | **3,604** | **4,129** | **217,217** | **237,929** | **283,088** | **391,811** | 467,157 |
| **மொ.உ.உ.இன் சதவீதமாக (ஊ)** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 54.9 | 46.5 | 42.4 | 43.2 | 37.1 | 56.8 | 47.3 | 43.9 | 42.5 | 38.8 |
| மொத்த வங்கித்தொழிற்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 6.9 | 6.8 | 7.1 | 7.7 | 6.6 | 7.1 | 6.9 | 7.3 | 7.6 | 6.8 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 61.8 | 53.3 | 49.4 | 51.0 | 43.7 | 63.9 | 54.2 | 51.2 | 50.1 | 45.6 |
| குறுங்காலப்படுகடன் | 3.1 | 2.7 | 2.2 | 3.4 | 3.6 | 3.2 | 2.8 | 2.3 | 3.4 | 3.7 |
| குறுங்காலப்படுகடனும் வங்கித்தொழிற்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களும் | 10.0 | 9.5 | 9.3 | 11.1 | 10.1 | 10.4 | 9.7 | 9.6 | 10.9 | 10.6 |
| **மொத்தப் படுகடனினதும் பொறுப்புகளினதும் சதவீதமாக** | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 5.1 | 5.1 | 4.5 | 6.7 | 8.2 | 5.1 | 5.1 | 4.5 | 6.7 | 8.2 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 11.2 | 12.8 | 14.3 | 15.1 | 15.0 | 11.2 | 12.8 | 14.3 | 15.1 | 15.0 |
| **அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுகடன்** | **29.5** | **24.3** | **22.4** | **31.7** | **41.6** | **29.5** | **24.3** | **24.4** | **31.7** | **43.3** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேறி உண்டியல்கள் மற்றும் முறிகளை உள்ளடக்குகின்றது
(இ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.
(ஈ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பற்றுக்களும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளை உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்
(உ) அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார்துறை நிறுவனங்களினதும் நீண்டகாலக் கடன்களை உள்ளடக்கியது
(ஊ) தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நடைமுறை சந்தை விலைகளிலமைந்த மொ.உ.உ யினை அடிப்படையாகக் கொண்டது.

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

கடன்களைக் குறைத்துள்ளமையால் அரசு அதன் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நிதியிடுவதற்கு சலுகையற்ற கடன்களைத் தேடுவதற்கு அதை நிர்ப்பந்தித்தது. எனினும், அரசு அதன் சலுகையல்லாப் படுகடன் இருப்பினை மிகக் குறைந்த இடர்நேர்வு மட்டத்திலே பேணி படுகடன் மீது அரசின் சுமையைக் குறைக்கிறது.

### வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

**கடன் தீர்ப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் சதவீதமாக 2007இன் 13.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 15 சதவீதத்திற்கு அதிகரித்தன.** ஐ.அ.டொலர் நியதிகளில் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2008இல் 23.8 சதவீதத்தினால் அதிகரித்தன. நாட்டின் வெளிநாட்டுப் படுகடன்களைத் தீர்ப்பதற்கான அதன் இயலளவை அளவிடுகின்ற படுகடன் பணி விகிதம் ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியின் ஆதரவுடன் நீண்டகால மீள்கொடுப்பனவு காலப்பகுதியினைக் கொண்ட சலுகைரீதியான கடன்களின் உயர்ந்த பங்கின் முக்கிய காரணமாக இன்னமும் வசதியான மட்டத்தில் இருக்கிறது. சுனாமியை அடிப்படையாகக் கொண்ட

**அட்டவணை 5.12** **வெளிநாட்டுப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2006 | 2007 | 2008(அ) | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 (அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 843 | 623 | 1,080 | 1,232 | 1,525 | 85,318 | 62,577 | 112,670 | 136,521 | 165,511 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 594 | 419 | 759 | 791 | 1,075 | 59,990 | 42,075 | 79,227 | 87,731 | 116,702 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 107 | 39 | 144 | 5 | 998 | 10,718 | 3,902 | 15,276 | 789 | 8,582 |
| (ii) ஏனையவற்றிற்கு | 487 | 380 | 615 | 786 | 998 | 49,272 | 38,173 | 63,952 | 86,942 | 108,120 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 249 | 204 | 321 | 441 | 450 | 25,328 | 20,502 | 33,443 | 48,790 | 48,809 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 10 | 10 | 14 | 14 | 11 | 988 | 973 | 1,452 | 1,509 | 1,173 |
| (ii) ஏனையவற்றிற்கு | 240 | 194 | 307 | 427 | 440 | 24,340 | 19,530 | 31,991 | 47,281 | 47,636 |
| 2. வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் | 7,284 | 7,887 | 8,508 | 9,415 | 10,140 | 738,714 | 793,153 | 885,380 | 1,041,932 | 1,098,376 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 9,004 | 9,891 | 10,980 | 12,365 | 13,026 | 912,817 | 994,751 | 1,142,515 | 1,368,959 | 1,411,335 |
| 4. படுகடன் பணி விகிதம் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 11.6 | 7.9 | 12.7 | 13.1 | 15.0 | 11.5 | 7.9 | 12.7 | 13.1 | 15.1 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 10.0 | 7.3 | 10.8 | 12.9 | 14.2 | 10.0 | 7.3 | 10.8 | 12.9 | 14.2 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 9.4 | 6.3 | 9.8 | 10.0 | 11.7 | 9.3 | 6.3 | 9.9 | 10.0 | 11.7 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 8.1 | 5.8 | 8.4 | 9.8 | 11.0 | 8.1 | 5.8 | 8.4 | 9.8 | 11.0 |
| 5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 484 | 268 | 610 | 813 | 1066 | 48,952 | 26,927 | 63,368 | 89,924 | 115,508 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 57.4 | 43.0 | 56.4 | 66.0 | 69.9 | 57.4 | 43.0 | 56.2 | 65.9 | 69.8 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) ரூபாய் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்
(இ) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல் தவிர்த்து

மூலம் : இலங்கை மத்திய வங்கி


படுகடனை மீளச் செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதம் காரணமாக 2005இல் ஒரு தடவை மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட குறைப்பிற்குப் பின்பு 2006இலிருந்து அட்டவணையிடப்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவுகள் தொடர்ந்தமை மற்றும் 2008இல் அரசின் வர்த்தகக் கடன்பாடுகளின் அதிகரித்துச் செல்லும் படுகடன் பணிச் செலவு நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளிலான அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக விளங்கின.

## 5.7 செலாவணி வீத அமைப்பும் செலாவணி வீத அசைவுகளும்

**உலகளாவிய நாணயச் சந்தைகளில் முன்னெப்பொழுது மில்லாத உயர்ந்த தளம்பல்கள் காணப்பட்ட போதும் 2008இல் மத்திய வங்கியின் செலாவணி வீதக் கொள்கை, செலாவணி வீத உறுதிப்பாட்டை அடைவதன் மீதே முக்கியமாக குவிந்திருந்ததுடன் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினைப் பேணுவதற்காக படிப்படியான சில தேய்வுகள் அனுமதிக்கப்பட்டன.** இலங்கையின் முதலாவது பன்னாட்டு நாட்டிற்கான முறிகளின் வழங்கல் வெற்றிகரமாக முடிவடைந்தமையின் காரணமாக ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 2008இன் தொடக்கத்தில் படிப்படியாக உயர்வடைந்தது. இது 2007 ஒத்தோபர் ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.114 இலிருந்து 2008 மாச்சில் ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.107இற்கு உயர்வடைந்தது. திறைசேரி முறிகளின் வெளிநாட்டு உடமை வெளிநின்ற மொத்த திறைசேரி முறிகளின் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு 2007 நவெம்பரில் அதிகரிக்கப்பட்டமைக்கான அறிவித்தலுடனும், 2008இன் முதலரைப்பகுதியில் முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் நலிவடைந்தமையுடனும் மேலும் வலுவடைந்தது. மேலும், வெளிநாட்டவர்களுக்கு திறைசேரி உண்டியல் சந்தை திறக்கப்பட்டமையும் 2008 மேயில் வெளிநின்ற திறைசேரி உண்டியலில் 10 சதவீதம் வரைக்கும் முதலிடக் கூடியளவிற்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட்டமையினதும் காரணமாக ரூபா உயர்வடைவதற்கான தொடர்ச்சியான அழுத்தம் காணப்பட்டது.

**வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட மிகையான தளம்பல்களைத் தணிப்பதற்காகவும், ரூபாவின் வரம்பு மீறிய உயர்வினால் ஏற்றுமதித்துறையின் போட்டித்தன்மை பாதிக்கப்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி உள்நாட்டிலுள்ள வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை கிரமமாக ஈர்த்து அதன் ஒதுக்கு நிலைமையினை வலுப்படுத்தியது.** இதன்படி, சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடானது ஐ.அ.டொலருக்கெதிரான செலாவணி வீதத்தினை ரூ.108 அளவில் உறுதிப்படுத்த உதவியதுடன் ஒத்தோபர் இறுதியில் இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 622 மில்லியன்களைக் கொள்வனவு செய்தது. நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்தமையுடன் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் சந்தையின் குறுங்கால முதலீடுகள் தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்டமை மற்றும் பெற்றோலிய உண்டியல்களின் கொடுப்பனவு என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி பெருமளவிற்கு வெளிச்சென்றமை 2008இன் இறுதிக் காலாண்டில் செலாவணி வீதம் தேய்வடைவதன் மீது பாரிய அழுத்தங்களைத் தோற்றுவித்தது. இவை தவிர, 2008 ஒத்தோபர்

**வரைபடம் 5.11** **செலாவணி வீத அசைவுகள்**




இறுதியில், ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி, ஏற்றுமதிக்கான கேள்வியின் குறைந்த வாய்ப்பு, பெரும்பாலான முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் கடுமையாக உயர்வடைந்தமை என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு மத்திய வங்கி ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா செலாவணி வீதத்திற்கான பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையினை அனுமதித்ததெனினும் மிகையான தளம்பல்கள் கவனமான தலையீடுகளினூடாக தடுக்கப்பட்டன. இதற்கு இணங்க 2008இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 1,014 மில்லியனை வழங்கியது. இதன் அடிப்படையில் 2008இல் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் மொத்த வழங்கல் ஐ.அ.டொலர் 1,532 மில்லியனாகக் காணப்பட்டது.

**இதன் விளைவாக, 2008 இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபாவின் தேய்மானம் 2007இன் தேய்மானமான ஏறத்தாழ 0.93 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 3.91 சதவீதமாகக் காணப்பட்டது.** அதேவேளை, ரூபாவானது இசுடேர்லிங் பவுண் (32.99 சதவீதம்), இந்தியா ரூபா (17.54 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக கணிசமாகவும் யூரோவிற்கெதிராக (0.51 சதவீதம்) மிதமானதாகவும் உயர்ந்து காணப்பட்ட வேளையில் யப்பானிய யென்னுக்கெதிராக (22.44 சதவீதம்) தேய்வடைந்தது.

**அட்டவணை 5.13** **செலாவணிவீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி சதவீதம் | | | ஆண்டுக்கான விகிதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2006 | 2007 | 2008 | 2006 | 2007 | 2008 | 2007 | 2008 | 2007 | 2008 |
| யூரோ | 141.58 | 160.27 | 159.45 | 130.63 | 151.63 | 159.32 | -11.66 | 0.51 | -13.85 | -4.82 |
| இந்திய ரூபா | 2.44 | 2.77 | 2.36 | 2.30 | 2.69 | 2.52 | -11.83 | 17.54 | -14.42 | 6.73 |
| யப்பானிய யென் | 0.91 | 0.97 | 1.25 | 0.89 | 0.94 | 1.05 | -6.83 | -22.44 | -4.96 | -10.51 |
| ஸ்டேர்லிங் பவுண் | 211.29 | 217.15 | 163.28 | 191.53 | 221.46 | 200.73 | -2.70 | 32.99 | -13.51 | 10.33 |
| ஐ.அ.டொலர் | 107.71 | 108.72 | 113.14 | 103.96 | 110.62 | 108.33 | -0.93 | -3.91 | -6.02 | 2.11 |
| சி.எ.உ. | 162.03 | 171.57 | 174.27 | 153.00 | 169.37 | 171.24 | -5.56 | -1.55 | -9.66 | -1.10 |
| பயன்தரு செலாவணி வீதச்சுட்டெண் (ஆ),(இ) (2006=100) | மாதாந்தச் சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
| | | | | | | | மதாந்த சுட்டெண் | | ஆண்டுச் சராசரி | |
| | திசெ 2006 | திசெ 2007 | திசெ 2008 | 2006 | 2007 | 2008 | 2007 | 2008 | 2007 | 2008 |
| பெ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 94.35 | 87.79 | 93.71 | 100.00 | 89.23 | 90.20 | -6.95 | 6.74 | -10.77 | 1.09 |
| உ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 99.26 | 105.65 | 125.47 | 100.00 | 100.07 | 118.08 | 6.43 | 18.77 | 0.07 | 18.00 |


(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஆ) பெ.தா.செ வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் முக்கியத்துவத்தினை பிரதிபலிகின்ற விதத்தில் நிறைகள் வர்த்தகப் பங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உ.தா.செ. வீதம் கணிக்கப்படுகிறது. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(இ) உ.தா.செ.வீ. கணிப்பிற்கான கொநுவிசு பயன்படுத்தப்பட்டுள்ளது.

வரைபடம் 5.12 வங்கிகளுக்கிடையிலான காலாண்டுரீதியான முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல் அளவுகள்




### பெயரளவு மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2008இல் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆகிய இரண்டும் 2007இலும் பார்க்க விரைவான வேகத்தில் தொடர்ந்தும் உயர்வடைந்தன.** நாணயக் கூடையிலுள்ள பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு உயர்வினை பிரதிபலிக்கின்ற விதத்தில், 5 நாணய மற்றும் 24 நாணய கூடைகள் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட இலங்கை ரூபாவின் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் 2007ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட தேய்வுடன் ஒப்பிடுகையில் 2008இல் உயர்வடைந்தது. அதேவேளை, பெயரளவு செலாவணி வீதங்களிலுள்ள வேறுபாடுகளுக்குப் புறம்பாக, நாடுகளிடையேயான பணவீக்க வேறுபாடுகளைக் கவனத்திற் கொள்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 2008இல் மேலும் கணிசமானளவில் உயர்வடைந்தது.

### உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல்கள், உயர்ந்த பன்னாட்டு வர்த்தகம், தொழிலாளர் பணவனுப்பல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பனவற்றின் காரணமாக 2008இல் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கை மட்டம் அதிகரித்தது.** உள்நாட்டு சந்தை வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் நிலவிய குறைந்த பன்னாட்டு வட்டி வீதங்கள் மற்றும் ஆண்டின் தொடக்கத்தில் உள்நாட்டு திறைசேரி உண்டியல் மற்றும் முறிச் சந்தைகளுக்குள் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதில் உதவிய ஒப்பீட்டுரீதியில் உறுதியான செலாவணி வீதம் என்பனவற்றின் விளைவாக உயர்ந்த வட்டி வீத வேறுபாடுகள் தோன்றின. எனினும், ஆண்டின் இறுதிப்பகுதியில் நிதியியல் நெருக்கடிகள் தீவிரமடைந்ததுடன் குறுங்கால முதலீடுகள் சடுதியாக ஒடுக்கப்பட்டமை மற்றும் ரூபா மேலும் தேய்வடையும் என்ற எதிர்பார்ப்பு என்பன செலாவணி வீதத்தில் ஊக அசைவுகளைத் தடுப்பதற்காகவும் செலாவணி வீத சந்தை உறுதியாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்குமாக முன்னெச்சரிக்கையுடன் கூடிய முன்மதியுடைய வழிமுறைகளை எடுப்பதற்கு மத்திய வங்கியைத் தூண்டின. இவ்வழிமுறைகள் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கை மட்டத்தினை குறிப்பிட்டளவிற்கு கட்டுப்படுத்தியது.

**இவ்வாண்டில் மத்திய வங்கி சந்தையின் இரு பக்கங்களிலும் தலையிட்டதுடன் செலாவணி வீதங்களின் பிழையான மற்றும் தேவையற்ற அசைவுகளைத் தடுக்க உதவியது.** 2008இல் மத்திய வங்கி, வங்கிகளுக்கிடையிலான சந்தையிலிருந்து மொத்தமாக ஐ.அ.டொலர் 656 மில்லியன்களை ஈர்த்துக் கொண்டு ஐ.அ.டொலர் 1,532 மில்லியனை நிரம்பல் செய்தமையின் விளைவாக 2007இன் தேறிய நிரம்பலான ஐ.அ.டொலர் 123 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஐ.அ.டொலர் 876 மில்லியன் கொண்ட தேறிய நிரம்பலை விளைவித்தது.